Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

மலர் 7 EELA NADU இதழ் 106

National Tamil Daily தேசிய தினசரி


(28-5-65)

விசுவாவசு வைகாசி 15 முஹ ... பிறை 26 வெள்ளிக்கிழமை

ஈழநாடு
சந்தா விபரம்

இந்தியா – இலங்கை

| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

நீடித்த பாவனைக்கு
சொனென்ஷீன்

சொனென்ஷீன்
பற்றறிகளையே உபயோகியுங்கள்
வடமாகாண ஏகவினியோகஸ்தர்கள்:-
துரை அன் கோ
23/3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.



# வட்டமேசை மாநாடு சம அந்தஸ்து தருமா

ஆசிரியர்களுக்கு

## பிரதேச வாரியான இடமாற்றம்

### அடுத்தமாதம் முதல் திகதி அமுலாகும்

கொழும்பு, வியாழன்

அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஆசிரியர்கள் பிரதேச ரீதியில் இடமாற்றம் செய்யப்படுவார்கள். இந்த இடமாற்றத் திட்டத்தை கல்வி அதிபர் திரு. அல்விஸ் அங்கீகரித்துள்ளார்.

ஆசிரியர்களை பிரதேச ரீதியில் இடமாற்றம் செய்யும் திட்டத்தை கல்வி அதிபர் அங்கீகரித்துள்ளார். இதன்காரணமாக அடுத்த மாதம் முதல் திகதி தொடக்கம் பிரதேச இடமாற்றத் திட்டம் அமுலுக்கு வரும். குறிப்பிட்ட பிரதேசத்துக்குள் அதிக ஆசிரியர்கள் உள்ள பாடசாலையிலிருந்து, குறைந்த ஆசிரியர்கள் உள்ள பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படுவார்கள். எவ்வளவுக்கெவ்வளவு ஆசிரியர்களின் சம்மதத்துடனே அவர்களை இடமாற்றம் செய்யமுடியுமோ அவ்வளவுக்கு இந்தத் இடமளிப்பது திட்டத்தின் புதிய

(8-ம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில்

## கங்காணிமார் ஒருமணி நேர வேலைநிறுத்தம்

### இன்று விசாரணை நடைபெறும்

யாழ்ப்பாணம், சனி

தம்மீது சமர்ப்பிக்கப்பட்ட புகார் ஆதாரமற்றது என்றும் இதுபற்றி பகிரங்கவிசாரணைசெய்ய வேண்டுமெனவும் அவ்விதமில்லையெனில் தாம தொழிற்சங்க நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் கங்காணிமார் செய்த முறைப்பாடுபற்றி தாம் இன்று விசாரணையொன்று நடத்துவதாக வைத்தியஅத்தியட்சகர் உறுதியளித்ததன்பேரில் நேற்று சுமார் ஒரு மணிநேரம் வெளிநடப்புச்செய்திருந்த கங்காணிகள் மீண்டும் வேலைக்குத் திரும்பினர்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் இரவுநேரங்களில் கடமை புரியும் கங்காணிமார் ஆஸ்பத்திரியிலுள்ள "பாண்டேஜ்" துணிகளை வெளியில் எடுத்துச் சென்றுவிடுவதாக மேற்படி ஆஸ்பத்திரி ஆலோசனை சபைக்கமிட்டி அங்கத்தவர் ஒருவர் சுகாதாரசேவை அத்தியட்சகருக்கு செய்துகொண்ட புகார் சம்பந்தமாக சுகாதார சேவை அத்தியட்சகர் பொலிசாருக்குத் தெரிவித்திருந்தாரென்றும்பொலிசார் நேற்றுசந்தேகத்தின்பேரில் கடமையாற்றிக் கொண்டிருந்த இரு கங்காணிமாரைக்கூட்டிச்சென்று அவர்களது வீட்டில் பரிசோதனை செய்தனரென்றும் அவர்களது வீட்டில் வெளியில் எடுத்துவரப்பட்டதாகக் கூறப்பட்ட பொருள்கள் இல்லாததைத் தொடர்ந்து பொலிசார் புகார் ஆதாரமற்றது என அவர்களை விடுதலை செய்ததாகவும் அறியப்படுகிறது. இதனைத் தொடர்ந்தே கங்காணிமார் வெளிநடப்புச் செய்ததாகவும் அறியப்படுகிறது. இவ்வித செயலை ஆட்சேபித்து அகில இலங்கை சுகாதார தொழிலாளர் சங்கம், அரசாங்க சுகாதார சேவையாளர் சங்கம், ஆஸ்பத்திரி பயிற்றப்பட்ட பணியாளர் சங்கம் ஆகிய சங்கங்கள் தொழிற்சங்க ரீதியில் நடவடிக்கை எடுப்பதற்காக ஆஸ்பத்திரி வைத்திய அத்தியட்சகருடன் தொடர்புகொண்டதாகத் தெரிகிறது. மேற்குறிப்பிட்ட கமிட்டி அங்கத்தவர் பகிரங்கமாக மன்னிப்பு கேட்கவேண்டுமென்றும் இல்லாவிடில் இதுபற்றி பகிரங்க விசாரணை செய்யவேண்டுமெனவும் இச்சங்கங்கள் கேட்டுக்கொண்டபோது குறிப்பிட்ட அங்கத்தவரை வைத்திய அத்தியட்சகர் அழைத்து விசாரணை செய்ததாகத் தெரியவருகிறது: இதுபற்றி பகிரங்க விசாரணை இன்று நடத்துவதெனவும் வைத்திய அத்தியட்சகர் உறுதியளித்ததைத் தொடர்ந்து தொழிற்சங்க ரீதியிலான நடவடிக்கை கைவிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# தேசிய அரசாங்கம் தருவது இடைக்காலத் தீர்வுதான்

## திரு. எஸ். ஜே. வி. விளக்கம்

### சம அந்தஸ்தும் சமஷ்டியும் நிரந்தரத் தீர்வு

யாழ்ப்பாணம், வெள்ளி

"வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் நிர்வாக மொழியாகவும், இலங்கையின் இதர ஏழு மாகாணங்களிலுள்ள தமிழ்பேசும் மக்கள் அரசாங்கத்துடன் தமிழில் தொடர்புகொள்ளவும்கூடிய முறையில் தமிழ் மொழி உபயோகச் சட்டத்தின்கீழ் விதிகள்தயாரிக்க தேசிய அரசாங்கம் உத்தேசித்துள்ளது. சம அந்தஸ்து என்ற கொள்கையைக் கைவிடாமல் இந்த யோசனையை ஒரு இடைக்காலத் தீர்வாக நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்துக்கும் இது நன்கு தெரியும்".

இவ்வாறு தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. செல்வநாயகம் விடுத்துள்ள ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

வசாவிளானில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற ஒரு கூட்டத்தில் இந்த அறிக்கை வாசிக்கப்பட்டது. இலங்கைக்குச் சமஷ்டி ஆட்சி அமைப்பு ஏற்படவேண்டிய அவசியத்தையும் அவர் தமது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

திரு செல்வநாயகம் தமது அறிக்கையில் குறிப்பிட்டதாவது:-

சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் தகராறாகஇருந்த பல பிரச்னைகளுக்கு ஒரு தீர்வுகாணும்முகமாக 1957ம் ஆண்டில் காலஞ்சென்ற திரு பண்டாரநாயகாவும் நாமும் ஒரு உடன்பாடு செய்து கொண்டோம். இந்த உடன்பாடு தமிழர்களுக்குக் கேடு விளைவிக்கக்கூடியதென்று திரு பொன்னம்பலம் யாழ்ப்பாணத்தில் சுமார் மூன்று மாதகாலம் பிரசாரம் செய்து வந்தார், நிதானமும் விவேகமுமுள்ள தமிழ் பேசும் மக்கள் அதை ஏற்றுக் கொள்ள வில்லை, அந்த உடன்பாடு தமிழ் மக்களுக்கு நன்மையானதென்பதை அவர்கள் நன்கறிவார்கள் அன்றிலிருந்து இலங்கையில் இதுவரை நடந்தசம்பவங்களிலிருந்து அந்த உடன் படிக்கை தமிழர்களுக்கு நன்மையானதென்பது நன்குதெரிந்து விட்டது.

#### அவர்களும் எதிர்த்தார்கள்

தமிழர்களுக்கு கேடான உடன்பாடு என்று இங்கு தமிழ்மக்களின் மனதைத் திருப்ப பிரசாரம் நடைபெற்றுவந்தஅதேசமயம் தமிழ் மக்களுக்கு அதிக உரிமைகளையும்சலுகைகளையும் திரு பண்டாரநாயகா அள்ளிக்கொடுத்து விட்டதாக சிங்கள மக்கள் குறை கூறி அவரது வீட்டிற்குள் புகுந்து அந்த உடன்படிக்கையை கிழித்தெறியச் செய்தனர்.

திரு. பொன்னம்பலம் ... அதேகாரியத்தை இப்பொழுது செய்கிறார் மொழிப்பிரச்னையை என்னமுறையில் தீர்த்து வைக்க யோசித்துள்ளதென்பதை சிம்மாசனப்பிரசங்கத்திலும் யு என் பி யின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் தெரிவித்திருந்ததை திரு பொன்னபலம் கவ்கறிவார். இதுபற்றிச் சிறிது ஆராய்வாம்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் நிர்வாகமொழியாக இருக்கும்வகையில் தமிழ் மொழி உபயோகச்சட்ட (விசேஷ ஷரத்துக்கள்)த்தின் கீழ் விதிகளைத் தயாரிக்க தேசிய அரசாங்கம் உத்தேசித்துள்ளது. இதுதவிர இலங்கையின் இதர மாகாணங்களிலுமுள்ள தமிழ்பேசும்மக்கள் அரசாங்கத்துடன் தங்கள் மொழியில் அலுவல்களைச் செய்வதற்கும் வசதியளிக்கப்படும் இவை யாவும் இன்று பிரபலமாகியுள்ள சிங்களம் மட்டும் சட்டத்தில் திருத்தம் செய்யாமலே நடைபெறவிருக்கின்றன

#### இடைக்கால தீர்வு

1959-ம் வருடத்திலிருந்து 1965-ம வருடம்வரை தமிழ் பேசும் மக்களுக்குப்பிரதிநிதித்துவம் வகித்த ஒருகட்சி என்ற முறையில், சமஅந்தஸ்துதான் நிரந்தரமான தீர்வு என்ற எமது கொள்கையை எவ்விதத்திலும் கைவிடாமல், இந்த ஏற்பாட்டை ஒரு இடைக்காலத் தீர்வு என்ற முறையில் ஏற்றுக் கொண்டுள்ளோம்

சிம்மாசனப் பிரசங்கத்தை ஏற்றுக் கொண்ட பின்னரும் இந்த இடைக்காலத் தீர்வை திரு பொன்னம்பலம் கண்டிக்கிறார். சிங்களம்மட்டும் சட்டம் திருத்தப்பட்டால் என்ன திருத்தப்படாவிட்டாலென்ன? எங்களுக்கு விஷயந்தான் தேவையேயொழிய சலசலப்பல்ல! இந்த ஏற்பாட்டை நியாய புத்தியுள்ள தமிழர் எவரும் நிராகரிப்பார் என்று நான் நினைக்கவில்லை. இந்த ஏற்பாடு இல்லாமல், இன்றுள்ள சட்டத்தின்படி நாட்டின் சகல அலுவல்களும் சிங்களத்தில் மாத்திரந்தான் செய்யப்படும். யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் பொதுமக்கள் சிங்களத்தில்தான் கருமமாற்ற வேண்டி நேரும். இதைத் தடுக்கும் ஆவலினால் தேசிய அரசாங்கம் அளிக்க முன்வந்த ஏற்பாட்டை தமிழ் பேசும் மக்களின் சார்பில் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். இதுவிஷயம் பற்றித் தேர்தலில் பரீட்சித்துப்பார்த்தால் மக்கள் எங்களுக்கே வாக்களிப்பார்கள் என்று துணிந்து கூறுவேன். சிங்களம் மட்டும் சட்டத்தால் மக்கள் பெரும் கஷ்டமடைந்திருக்கின்றனர். யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலுமுள்ள மக்கள் அரசாங்கத்திடமிருந்து தங்களுக்குப் புரியாத மொழியில் உத்தியோக ரீதியான கடிதங்களைப் பெற்றுவந்துள்ளனர். 1956ம் ஆண்டுக்குமுன் அரசாங்க சேவையில் சேர்ந்தவர்கள் கட்டாய ஓய்வுபெற வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளானார்கள். இவற்றுக்கெல்லாம் முற்றுப்புள்ளிவைக்க நாம் ஆவல்கொண்டுள்ளோம்.

#### வட்டமேசை மகாநாடு

வட்டமேசை மகாநாடுமூலம் இப்பிரச்னைக்குத் தீர்வுகாண திரு. பொன்னம்பலம் விரும்பும்

(8-ம் பக்கம்பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible]
அடிப்படையான விஷயங்களில் எல்லாச் சமயங்களும் ஒன்றே. முக்கியமில்லாதவற்றிலும் சடங்குகளிலும் அவை வெவ்வேறாகத் தோன்றுகின்றன.

— சுவாமி ராமதாஸ்


# ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box 49, Jaffna. Telegrams: "EELA NADU" Jaffna Phone: 389.

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு வைகாசி ௴ 15 ௳ (28-5-65)


## இராணுவத்தால் முடியாது

நெடுந்தீவைச் சேர்ந்த ஆறு மீன்பிடிகாரர்கள் பூநகரியிலே மீன்பிடிப்பதற்காக முகாமிட்டிருந்தபோது அவர்களைச் சட்டவிரோதக் குடியேற்றகாரர் என்று சந்தேகித்து இராணுவத்தினர் அவர்களை அடித்து இம்சை செய்து பின்னர் கிளிநொச்சிப் பொலிஸிடம் ஒப்புவித்ததாயும், பின்னர் அவர்கள் பிணையில் விடுதலைபெற்றதாகவும், ஊர்காவற்றுறை எம். பி. இது பற்றி மேற்கொண்டு நடவடிக்கை எடுத்து வருவதாயும் ஒரு செய்தி கூறியது. நீதிமன்றத்தில் இவ்விஷயம் விசாரணைக்கு வரக்கூடுமாகையால் இக் குறிப்பிட்ட சம்பவத்தைப்பற்றி இக்கிலையில் நாம் எதுவும் கூறுவதற்கில்லை.

ஆனால் இலங்கையர்களை சட்டவிரோதக் குடியேற்றக்காரர் என்று சந்தேகித்து, இராணுவத்தினர் பிடித்து அடித்து இம்சிப்பதாக இதற்குமுன் பன்முறை புகார்கள் கிடைத்துள்ளன. சட்ட விரோதக் குடியேற்றத்தைத் தடுப்பதற்கென்றுகூறி, வடக்கிலும் கிழக்கிலும் பல இராணுவ முகாம்களை ஏற்படுத்திய காலத்திலிருந்து இப் பகுதியிலுள்ள பொதுமக்கள் நிம்மதியாக வாழ முடியாமல் இருப்பது பகிரங்க ரகசியம். இலங்கையர் யார், சட்ட விரோதக் குடியேற்றக்காரர் யார் என்ற வேற்றுமை தெரியாமல் ஒரு இலங்கையரையும் இராணுவத்தினர் பிடித்து இம்சிப்பது உண்மையாயின் அது சற்றும் சகிக்க முடியாததாகும். இதுபெரிய அநியாயம் மும்கூட.

கள்ளக்குடியேற்றத்தை அடியோடு தடுக்கவேண்டியதுதான் தேசாபிமானிகள் யாரும் இதற்குச் சற்றும் இணங்கமுடியாது. ஆனால் பொதுமக்களின் ஒத்துழைப்பு இருந்தால்தான் இந்தத் தீமையை நீக்கமுடியுமேயொழிய இராணுவக் கெடுபிடிகளாலும் அடக்குமுறைகளாலும் இப்பிரச்னையைத் தீர்க்கமுடியாது. இராணுவத்தை எவ்வளவோ பலப்படுத்தியும்கூட கள்ளக்குடியேற்றத்தை இதுவரை தடுக்கமுடியவில்லை என்பது பகிரங்கரகசியம். காரணம் பொதுமக்களின் ஒத்துழைப்பை இராணுவத்தினரும் அதிகாரிகளும் பெறத்தவறிவிட்டதுதான், ஒத்துழைப்பை பெறமுடியாதது ஒருபுறமிருக்க, இப்பகுதியிலுள்ள பொதுமக்களுக்கு இராணுவத்தால் இம்சை ஏற்பட்டு, நிம்மதியில்லாமல், இருப்பதால் இராணுவத்தினரை இங்கிருந்து உடன் அகற்றிவிட்வேண்டியது மிகவும் அவசியம்,

பொதுமக்களின் ஒத்துழைப்பைப் பெறுவதாயின், பொலிசாரே இந்தப் பிரச்னையை அதிக வெற்றிகரமாகச் சமாளிக்கமுடியும். இருதேச அதிகாரிகளும் திருச்சிராப்பள்ளியில்கூடி, இப்பிரச்னையைச் சமாளிப்பது பற்றி ஆலோசனை நடத்தியுள்ளனர். இருஅரசாங்கங்களும் இவ்விஷயமாக நெருங்கி ஒத்துழைப்பதுடன் பொதுமக்களின் ஒத்துழைப்பையும் பெறமுடிவதாயின் இந்தப் பிரச்னையை அதிக வெற்றியுடன்சமாளிக்கமுடியும், இது எப்படியாயினும், இராணுவத்தினரால் இந்தப் பொறுப்பை நிறைவேற்ற முடியாதென்பது இப்போது தெரிந்துவிட்டதாலும் இங்குள்ள பொதுமக்களுக்கு இராணுவத்தால் அதிக சங்கட்டங்களும், இம்சைகளும் ஏற்படுவதாலும் அவர்களை உடன் இங்கிருந்து நீக்க, நமது பிரதிநிதிகள் அரசாங்கத்தை வற்புறுத்தவேண்டும், இவ்விஷயத்தில் அரசியல் கட்சிகளுக்கிடையே கருத்து வேற்றுமைக்கு இடம் இல்லை.

## குருகுல முறைக் கல்வி அவசியம்

உடுப்பிட்டி, வியாழன்

நமது சிறந்த மொழி, கலை, கலாசாரங்களில் துரிதமான வளர்ச்சியை ஏற்படுத்தவும், பரபரப்பும் வேகமும் நிறைந்த இச்சமுதாயத்திலும் தனிமனித வாழ்விலும் நிரந்தரமான அமைதியை ஏற்படுத்தவும் பொருத்தமான ஒரு கல்விமுறை குருகுல அடிப்படையில் இயங்குவதேயாகும். தமிழ்நாடும் பரந்த பாரதமும் வரலாற்றுக்கு முந்திய காலந்தொட்டு குலகுலக் கல்வி முறையிலேயே மனித ஆன்மா மலர்ச்சிபெற முயற்சிசெய்து வருகின்றன" இவ்வாறு வல்வெட்டியில் கடைபெற்றவாணி கலைக்கழக கிளைக் கூட்டத்திற்குத் தலைமைவகித்த கழக இயக்குநர் பண்டிதர் திரு: க. வீரகத்தி பேசுகையில கூறினர்,

"தக்சசீலம், நாளந்தா, காசி, விக்கிரமசீலம் முதலியன வடநாட்டிலும், எண்ணாயிரம், திருமுக்கூடல், திருவொற்றியூர் ஆகியன தென்னாட்டிலும் மிகச் சிறந்த குருகுல நிலையங்களாகப் பழைய காலத்தில் பணி புரிந்தன. இன்றும் கவிதாகூர் கண்ட சாந்திநிகேதனம் உலகப்பிரசித்தி பெற்ற குருகுலக் கல்விப் பல்கலைக் கழகமாகும். தமிழ்நாட்டில் தருமபுரம், திருவாவடுதுறை திருப்பனந்தாள் ஆகியன குருகுல அடிப்படையிலேயே மொழிக்கும் சமயத்திற்கும், மனித ஆன்மாவுக்கும் வேகமும் இயக்கமும் அமைதியும அளித்து வருகின்றன" என்று பண்டிதர் வீரகத்தி மேலும் கூறினர்.

சைவப்புலவர் செல்வன் இ. பரமகுரு பேசுகையில், வாணி கலைக்கழகம் ஏழை மாணவர்களுக்குரிய ஒரேயொரு பெருநிழலைப் பணி புரிகின்றது என்றார்.

திரு. க. நவரத்தினம், புலவர் பாலசுப்பிரமணியம் கா.சந்திரசேகரம் ஆகியோரும் பேசினர்.

வல்வெட்டித்துறையிலுள்ள குச்சொழுங்கைகளையும் போக்குவரத்திற்கு இடைஞ்சலாகவுள்ள பாதைகளையும்வாணிகலைக் கழகக் கிளையினரால் சிரமதான இயக்கப்பணிமூலம் சீர்ப்படுத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. திரு. கிருஷ்ணசாமி நன்றிகூறினர.



# உள்ளூர் உற்பத்தியைப் பெருக்க மந்திரி திட்டம்

பம்பலப்பிட்டி வியாழன்

உள்ளூரில் உற்பத்தியாகும் உருளைக்கிழங்கு வெங்காயம் ஆகியவற்றுக்கு மேலும் ஊக்கமளித்து அவற்றின் உற்பத்தியை இங்கு அதிகரிக்க உணவு மந்திரி திரு. எம். டி. பண்டா திட்டமிட்டுள்ளார்,

யாழ்ப்பாணத்தில் வெங்காய உற்பத்தியை அதிகரிக்கவேண்டுமென விவசாய இலாகா அபிப்பிராயம் கொண்டுள்ளதாகவும் அறியப்படுகிறது. இதுசம்பந்தமாக உடன் நடவடிக்கை எடுக்குமாறு மந்திரி அறிவித்தல் செய்துள்ளார்.

இந்திய வெங்காயத்தில் அதிகம் நம்பியிருக்கவேண்டியிருப்பதாலேயே நாடு பலதடவைகளில் வெங்காயத் தட்டுப்பாட்டை எதிர்நோக்கவேண்டியிருந்ததாக உணவு அமைச்சு அதிகாரிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இலங்கையில் உருளைக்கிழங்கு, வெங்காயம் ஆகியவற்றின் உற்பத்தியைப் பெருக்குவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக உணவு மந்திரி கருத்து வெளியிட்டுள்ளார்.

## ஏ. சி. எஸ். ஹமீத் யாழ்ப்பாணம் வருகிறார்

குரும்பசிட்டி, வியாழன்

அக்குரணைத் தொகுதி பாராமன்ற அங்கத்தவர் திரு. ஏ.சி. எஸ். ஹமீது ஜூன் மாதம் 4-ந் திகதி வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வருகிறார். குரும்பசிட்டி கிராமமுன்னேற்றச்சங்க சார்பில் தமிழரசுக்கட்சித் தலைவரும் காங்கேசன்துறை எம். பி. யுமான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்திற்கு அளிக்கப்படவிருக்கும் வரவேற்புபசார விழாவில் கலந்துகொள்வதற்காகவே இவர் இங்கு விஜயம் செய்கின்றார். பிரஸ்தாப வரவேற்பு உபசார விழாவில்பங்குபற்றி சொற்பொழிவாற்ற வட்டுக்கோட்டை எம். பி. திரு அ. அமிர்தலிங்கம், சாவகச்சேரி எம். பி. திரு. வ. ந. நவரத்தினம், கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேற்பிள்ளை ஆகியோரையும் கி. மு. சங்கத்தினர் அழைத்துள்ளனர். விழா ஆரம்பமாகுமுன்பு கி. மு. சங்கத் தலைவராக பல ஆண்டுகள் கடமையாற்றி கிராமத்து பல அபிவிருத்திவேலைகளைச் செய்ய உதவிபுரிந்தவரமான காலஞ்சென்ற திரு. ம. திருநாவுக்கரசுவின் உருவப்படத்தை சங்க மண்டபத்தில் திரு. செல்வநாயகம் திறந்துவைப்பார்.

## போலந்து நட்புறவுச் சங்கம் யாழ்ப்பாண நகரில் அமைக்கப்படும்

குரும்பசிட்டி, வயாழன்

இலங்கை—போலந்து நட்புறவுச் சங்கத்தின் கிளையொன்று யாழ் நகரில் வெகு விரைவில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவிருக்கின்றது. கொழும்பிலுள்ள போலந்து ஸ்தானிகர் திரு. ஜோசெவ் சாக்கி விக்ஸ் அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்தபோது நட்புறவுச்சங்கம் ஸ்தாபிப்பது குறித்து இங்குள்ள பிரமுகர் சிலரைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடாத்தியுள்ளனர்.

## சிக்கன நடவடிக்கை

பம்பலப்பிட்டி, வியாழன்

இலங்கையின் வெளிநாட்டு தூதரகங்களில் செலவுகளைக் குறைத்து சிக்கன நடவடிக்கை மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதுபற்றி [illegible] வெளிவிகார அமைச்சு இலங்கை [illegible] செய்விருக்கிறது.

## அரிசித் தட்டுப்பாடு ஏற்படலாம்

பம்பலப்பிட்டி, வியாழன்

இன்னும் இரு மாதங்களில் இலங்கையில் தீவிர அரிசித் தட்டுப்பாடு ஏற்படலாமெனஎதிர்பார்க்கப்படுகிறது.

இதனை முன்னிட்டு உணவுக் கமிஷனர் திரு. பி. ஏ. சில்வாகவ அரிசி பெறுமுகமாக தாய்லந்துக்கும் பர்மாவுக்கும் அனுப்ப அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

வார பங்கீட்டரிசி வழங்குவதற்கு மேலும் அரிசி தேவைப்படுவதாகவும் இது இப்போது அரசாங்கத்தை எதிர்நோக்கியுள்ள பிரச்னையாக இருப்பதாகவும் தெரிகிறது.

மேலதிக அளவு அரிசி அனுப்புவது பற்றி சீனவும் பர்மாவும் தெளிவாகத் தெரிவிக்கவில்லை என உணவு இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## அழிந்து போன வீதி திருத்தப்படவில்லை

நெடுந்தீவு, வியாழன்

கடந்த வருடம் சூறாவளி காரணமாக நெடுந்தீவு கிழக்கு கடற்கரை மிக மோசமான நிலையில் பாதிக்கப்பட்டுள்ளது— கரையோரமாக இருந்த வீதி கடலினால் அரிக்கப்பட்டு அழிந்து போய் விட்டது இப் பகுதியில் வாழும் மக்கள் இவ் வீதி அழிந்தபின் வேறு வீதிகளை உபயோகப் படுத்த வேண்டிய கஷ்டத்துக்கு ஆளானது மட்டுமல்லாது மீண்டும் கடல் கொந்தளிக்குமேயானல் தங்கள் உயிருக்கே ஆபத்து விளையக் கூடும் என கவலைப்படுகின்றனர்கள். கடலோரமாக இருந்த மீனவர்களின் வீடுகளும் பொருட்களும் கடலில் மூழ்கியதால் பெரும் கஷ்டத்துக்குள்ளானர்கள். இக் கடற்கரையை மீண்டும் திருத்தி அணைகட்டாவிடில் சில வருடங்களுள் நெடுந்தீவின் ஒருபகுதி கடலில் மூழ்கவும் கூடும் என அஞ்சப்படுகிறது.

(5-ம் கலத் தொடர்ச்சி)

களிலும் புதிய புதிய கைத்தொழில்கள், எங்கும் சுறுசுறுப்பு; புதுப் புதுக்கட்டிடங்கள் எழுந்து வருகின்றன. செழிப்பாக இருக்கப் போகிறது. இலங்கையிலிருந்து கள்ளத் தோணியில் இனி அங்கு செல்லலாமென்றும் அங்குள்ள ஓர் இலங்கையர் சொல்லிச் சிரித்தார். யாத்திரைக்காக என்று அங்கு சென்ற ஓர் இலங்கையர் மூன்று வருடங்களுக்குமேல் அங்கேயே தங்கி விட்டாராம்.

* * *

நெய்வேலிக்கும் சிதம்பரத்துக்கும் இடையில்தான் வடலூர் வள்ளலாரின் சமாதி உள்ளது. திருமுருக கிருபானந்தவாரியார் இத்திருப்பணிப் பொறுப்பை ஏற்று அழகாகக்கட்டியுள்ளார். அருட்பாடல்களை எல்லாம் கட்டிடத்தைச் சுற்றி எழுதி இருக்கின்றனர். இரவு 7 மணிக்கு பூசை நடக்குமாம். பூசைக்கு நிற்கமுடியாமல், மிகக்கஷ்டப்பட்டு பஸ் ஏறி சிதம்பரம் திரும்பினேம்.

* * *

மன்னுருக் தன்னெப்பா தில்லான் கண்டாய் மயிலாடுதுறையிடமா மகிழ்ந்தான் கண்டாய், புற்றரவணிந்த புனிதன் கண்டாய் பூந்துருத்திப் பொய்லியாய் நின்றன் கண்டாய், அற்றுர்க்கட் கற்றுணைய் நின்றன் கண்டாய் ஐயாறமர்ந்த ஐயன் கண்டாய், கும்பலத்தமர்ந்துறையுங் கூத்தன் கண்டாய் கோடிகா அமர்ந்துறையும் குழகன்தானே.

— அப்பர் சுவாமிகள்

## ஐயாறன் எழுதுவது

நேருஜி மறைவதற்குச் சில வாரங்களுக்கு முன்தான் நெய்வேலிக்கு வந்திருந்தாராம். நெய்வேலி என்றால் தெரியுந்தானே! சிதம்பரத்துக்குப் பக்கத்தில் சில மைல் தூரத்தில் தான். அடிக்கடி பஸ்ஸுகள் ஓடுகின்றன.

'நெய்வேலி' என்ற பெயர் ஏன் வந்ததோ தெரியவில்லை. மூன்று வருடங்களிலே அந்த ஊரே அடையாளம் தெரியாதபடி எவ்வளவு அபிவிருத்தி அடைந்துள்ளது தெரியுமா?

"இந்த இடத்தில் தான் நேருஜி கடைசியாக வந்தபோது நின்று பத்து நிமிஷநேரத்துக்குமேல் நெய்வேலியின் முன்னேற்றத்தைக்கண்டு மகிழ்ந்தார். அவர் பன்முறையும் இங்கு வந்துள்ளார் இதன் முன்னேற்றத்தில் அதிக ஊக்கம் காட்டினர்......" என்று தகவல் இலாகா அதிகாரியான கிருஷ்ணமூர்த்தி எங்களுக்கு நெய்வேலி வளர்ந்த கதையையெல்லாம் மிகருசியாகக் கூறினர்,

* * *

சென்ற முறை அங்கு சென்றிருந்தபோது, இத்திட்டம் வெற்றிபெறுமா என்று சிலருக்குச் சந்தேகமும் பயமுமிருந்தது, ஆனல் இப்போது அந்த சந்தேகமும், பயமும் இல்லை. இரவு பகலாக அங்கு நிலக்கரிச்சுரங்கத்தில் வேலை நடந்து வருகிறது. பெரியபெரிய ராட்சத மெஷின்கள், நிலக்கரியை வெட்டி பக்கத்திலுள்ள டிராலி வண்டிகளில் போடுகின்றன. நூற்றுக்கணக்காக உள்ள டிராலிகள் அந்த நிலக்கரியை மின்சார நிலையத்துக்குக் கொண்டு போகின்றன, பல்லாயிரம் மக்கள் செய்யவேண்டிய வேலையை இந்த இரண்டொரு மெஷின்கள் செய்கின்றன!

நிலக்கரித்துண்டு ஒன்றை எடுத்து அந்த அதிகாரி கொடுத்தார். மரக்கிளை போன்ற அடையாளங்கள் இருந்தன. பல்லாயிரம் வருடங்களுக்கு முன்பாக அங்கு ஒரே காடாக இருந்ததாயும அந்த மரங்கள் பூமியில் புதைந்து மடிந்து, கரியாகிவிட்டதாயும் விளக்கினர். இந்தக்கரிசெல்வ உள்ளிட்டு தமிழ் நாட்டைப் பலவிதங்களிலும் செழிக்கச் செய்யப்போகிறதென்றர் அதிகாரி.

* * *

சுமார் பதினாயிரம் புதிய வீடுகளைக் கட்டியிருக்கின்றர்கள் விசாலமான ரஸ்தாக்கள் மின் விளக்குகள். பலருக்கு அங்கு வேலைவாய்ப்புகளுண்டு. இஞ்சினீர் கல்லூரியில் பரீட்சை எழுதி முடிந்ததும், பலருக்கு அங்கு வேலை கிடைக்கின்றதாம். சரீர உழைப்புத்தொழிலாளருக்குத்தான் அதிக சான்ஸ் இல்லை இந்தியாவிலே ஜனங்கள் அதிகம், வேலையில்லாமல் பலர் கஷ்டப்படுகிறர்கள். மக்கள் சக்திக்குப் பதிலாக மெஷின்களைப் பாவிப்பதால், வேலையில்லாக் கஷ்டம் தீரமுடியாதது துடன் இந்த மெஷின்களுக்காக, கோடிக்கணக்கான பணம் வெளிநாடுகளுக்கு வெளியேறுமே என்று என் மனதில் ஏதேதோ பட்டது. ஆனல் பெரிய பெரிய திட்ட நிபுணர்கள் இதெல்லாம் யோசித்திருப்பார்தானே! எப்படியோ, பூமிக்கடியிலிருந்த இந்தச் செல்வத்தை வெளியே எடுத்து மின்சக்தியைப் பெருக்கி, பல பல கைத்தொழில்களையும் ஆரம்பித்து நடத்துவது பெரிய காரியம். இந்தியா எப்படி முன்னேறிவருகிறதென்பதற்கு நெய்வேலி ஓர் அடையாளம், பொட்டக்காட்டாகச் சிலவருஷங்களுக்கு முன் இருந்த இந்த இடம் இப்போது எப்படியெல்லாம் மாறிவிட்டது!

தமிழ் நாட்டின் பல பகுதி

(4-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 'நேருபூர்த்திசெய்யாதவேலைகளை நிறைவேற்ற வேண்டும்'

## டாக்டர் ராதா கிருஷ்ணன் செய்தி

புதுடில்லி, மே 27

"நேருஜீ பூர்த்தி செய்யாது விட்டுச்சென்ற பணிகளை நிறைவேற்றி வைப்பதே நாம் அவருக்குச் செய்யும் சிறந்த ஞாபகச் சின்னமாகும்" என நேற்றிரவு ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் விடுத்த வானொலிச் செய்தியில் கூறினர்.

லசீகரமும் மகத்துவமும் பொருந்திய நேரு சமாதான சக்தியாக் விளங்குகிறர் என்றும், அவரது அறிவாற்றல், பணி, ஜனநாயகப்பற்று, நன்னலத்தை, கடுமுழைப்பு ஆகியன உலகுக்கே உதாரணமாய் விளங்கியது என்றும் டாக்டர் ராதாகிருஷ்ணன் குறிப்பிட்டார்.

இந்திய சரித்திரத்தில் காந்திஜிக்குப்பின் நேருதான் ஈடிணையற்ற மனிதராக விளங்குகிறர் என்றும் ஜனாதிபதி கூறினர்.

# நீக்ரோக்களுக்கு சம உரிமை: அமெரிக்க 'செனட்' அங்கீகாரம்

வாஷிங்டன், மே 27

இன, நிற பேதமின்றி சகல அமெரிக்கர்களுக்கும் ஒரேவிதமான வாக்குரிமை அளிக்கும் மசோதாவை அமெரிக்க செனட்சபை பெருவாரியான வாக்குகளால் நிறைவேற்றியது.

பலவார விவாதத்துக்குப் பின் மசோதாமீது நடைபெற்ற வாக்கெடுப்பில் சாதகமாக 77 வாக்குகளும், பாதகமாக 10 வாக்குகளும் கிடைத்தன. அமெரிக்காவின் தெற்கு ராஜ்ய செனட்டர்கள் மசோதாவைத் தடைசெய்ய மேற்கொண்ட முயற்சி தோல்வியுற்றது.

அலபாமாவில் ஏற்பட்ட சிவில் உரிமைக கிளர்ச்சிக்குப் பின் இந்த மசோதாவை ஜனாதிபதி ஜோன்ஸன் கொண்டு வந்தார்.

# "பதவி முக்கியமல்ல; நாட்டின் ஐக்கியமே முக்கியம்"

—சக்ஸேனா

புதுடில்லி, மே 27

பல்கலைக்கழகங்களில் போதனாமொழி சம்பந்தமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கும் கொள்கையையே தாம் எப்போதும் ஆதரிப்பதாக கல்வி மந்திரி எம். சி. சக்ளா அறிவித்தார்.

"இந்தியா சிறுசிறு பகுதிகளாகப் பிரிந்துபோவதையோ அல்லது பலவேறு மொழிப் பிரிவுகளாகச் சிதறுண்டு போவதையோ நான் விரும்பவில்லை" என்று அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவின் ஐக்கியமே தனக்கு மற்றெல்லாவற்றையும்விட பிரதானம் என்று திரு. சக்ள வலியுறுத்தினர்.

இறுதியில் பல்கலைக்கழகங்களில் போதனா மொழிகளாக பிராந்திய மொழிகளே வந்தாக வேண்டும் என்றும் அப்படி வரும்போது தொடர்பு மொழிகளான இந்தியும் ஆங்கிலமும் பலவீனமடையலாகாதென்றும், மாற்றம் எதுவாகவும் படிப்படியாகவும் கல்வியின் தரம் பாதிக்காதவகையில் செய்யப்பட வேண்டும் என்றும் கூறினர்.

ஆங்கிலமே எப்போதும் இருக்க வேண்டும். இந்தி எப்போதுமே வேண்டாம் என்று தென்னாட்டில் ஒரு பிரிவினரும், இந்தியே எப்போதும் இருக்க வேண்டும். ஆங்கிலம் கூடவே கூடாது என்று வடநாட்டில் ஒருசாராரும் பேசுவது நவநாகரிக வாழ்க்கையின் தேவைகளுக்கும் நமது மக்களின் மனோபாவத்திற்கும் முற்றிலும் விரோதமான வெறித்தனம் என்று திரு சக்ளா கண்டித்தார்.

இந்தியாவின் ஆட்சிமொழி என்ற முறையில் இந்திவளரட்டும். இந்தி வளர்ந்தோங்க வேண்டும். அதே நேரத்தில் இந்தி பேசாதமக்கள் இந்தியை மட்டுமேதொடர்பு மொழியாக ஏற்றுக்கொள்ளும்வரை ஆங்கிலத்தையும் துணைமொழியாக அங்கீகரிப்போம்' அப்புறமும்கூட நவீன சிந்தனை, விஞ்ஞானம், தொழில் சாஸ்திரம், சர்வதேசஉறவு இவற்றிற்கான மொழி என்ற முறையில் ஆங்கிலம் இரண்டாவது மொழியாக நீடித்திருக்கவே வேண்டும் என்று கல்விமந்திரி அறிவுறுத்தினர்.

சோவியத்யூனியன், ஐ. அ. குடியரசு ஆகியநாடுகளிலும் பள்ளிகளில் ஆங்கிலம் இரண்டாவது மொழியாகப் போதிக்கப்படுகிறதென்பதைச் சுட்டிக் காட்டிய அவர் அந்த மொழியை வெறுத்துத்தள்ளுவோமானல், அதற்காக வருந்த நேரிடும் என்றும் திரு. சக்ளா கூறினர்.

தம்மைப்பற்றிக் குறிப்பிடுகையில் தமக்கு நாட்டின் ஐக்கியந்தான் முக்கியமேயன்றி பதவி பெரிதல்லவென்றும் தமது புத்திக்கெட்டியவரையில் இந்தியாவின் ஐக்கியத்தைப் பலப்படுத்தவேமுயன்று வருவதாகவும் அதற்குமுட்டுக்கட்டை போடப்பட்டால் உடன் பதவியை விட்டுவிலகிக்கொள்ள தயாராயிருப்பதாகவும் திரு. சக்ளா தெரிவித்தார்.

## இந்தியக் கைதிகள் சித்திரவதை

புதுடில்லி, மே 27

பாகிஸ்தான் வசமுள்ள இந்தியக் கைதிகள் கொடுமைப்படுத்தப்படுவதாயும் சித்திரவதைக்குள்ளாகியிருப்பதாயும் இந்தியாபாகிஸ்தானிடம் ஆட்சேபனை தெரிவித்திருக்கிறது.

## 600 யு. எஸ். துருப்புக்கள் வாபஸ்

சாந்தாடொமிங்கோ, மே 27

டொமினிக்கன் குடியரசிலிருந்து 600 அமெரிக்க மாலுமித் துருப்புக்கள் நேற்று வாபஸ் பெற்றனர்.

# "இந்தியாவின் இணைப்பு மொழி ஹிந்தி"

## திரு. சுப்பிரமண்யம் விளக்கம்

சென்னை, மே 27

இப்போதுமுதலே கல்லூரிகளில் தமிழை போதனாமொழியாக்க ஏற்பாடுசெய்யவேண்டும் என உணவுமந்திரி திரு. சுப்பிரமண்யம் கூறினர்.

அகில இந்திய தேவைகளுக்கு ஹிந்தியே இணைப்புமொழியாக இருக்கவேண்டும் என்றும், சர்வதேச தொடர்புகளுக்கு ஆங்கிலத்தை உபயோகிக்கலாமென்றும் அவர் கூறினர்.

"தமிழை போதனா மொழியாக்கும் விஷயத்தில் அவசரப்பட வேண்டியதில்லை, ஆனல் அந்த முயற்சியை இப்போதே ஆரம்பித்துவிடவேண்டும். இதில் துரிதமான முன்னேற்றம் ஏற்படாவிட்டாலும் பரவாயில்லை. தமிழ்தான் போதனாமொழி என்பதை மாற்றக்கூடாது" என்றும் அவர் கூறினர்.

"கல்லூரிகளில் ஆங்கிலத்தில் பாடங்கள் போதிக்கப்படுவதால் மாணவர்கள் அவற்றைப் புரிந்துகொள்ள முடிவதில்லை என்று சொல்லப்படுகிறது; அவர்களிடையே காணப்படும் கட்டுப்பாடின்மையே இதற்குக்காரணம்.

தமிழையே கல்லூரிகளில் போதனாமொழி யாக்குவதற்கு நல்ல சூழ்நிலை இருக்கிறது, பெரிய தலைவர்களும் இதை ஆதரிக்கிறர்கள், பகிரங்கமாக இதை யாரும் ஆட்சேபிக்கவில்லை.

கல்லூரிகளில் தமிழை போதனாமொழியாக்குவது பற்றிய இப்போதைய குழப்பம் நீடிக்கக்கூடாது. இதில் ஏதாவது சங்கடம் ஏற்பட்டால் அதை ஆற்றவேண்டும். விஞ்ஞானம், தொழில் நுட்பம் உட்பட எல்லாபபாடங்களையுமே தமிழில் சொல்லிக்கொடுப்பதில் ... ... ..." என்றும் அவர் கூறினர்.

## இந்தோனேஷிய படகு மூழ்கடிப்பு

சிங்கப்பூர், மே 27

சிங்கப்பூர் துறைமுகத்துக்கருகே நேற்று ஒரு இந்தோனேஷியப்படகு மூழ்கடிக்கப்பட்டு, ஒரு இந்தோனேஷிய ஊடுருவல்காரர் கொல்லப்பட்டார்.

## சேதுசமுத்திர வேலைகள் ஆரம்பம்

புதுடில்லி, மே 21

ரூ. 80 கோடி செலவாகும் சேதுசமுத்திரத் திட்டத்திற்கான பூர்வாங்க வேலைகள் ஆரம்பமாகிவிட்டன. 4-ம் திட்டத்தில் இந்தவேலைகள் பூர்த்தியடையும்.

திட்டம் பூர்த்தியானதும் வங்காளக் குடாக்கடலிலிருந்து அரபுக் கடலுக்குச் செல்லும் கப்பல்களின் பிரயாணம் 2 நாட்கள் குறையும்.

## மதீனவில் ஹூஸெய்ன்

மதினு, மே 27

இந்திய உபஜனாதிபதி டாக்டர் ஸகீர் ஹூஸெய்ன் இன்று மதினவுக்கு வந்து சேர்ந்தார். முகம்மதுநபியின் கல்லறையை அவர் அங்கு கண்ணுற்றார்.

## தென்வியட்னமுக்கு ஆஸி. துருப்புகள்

கான்பரா, மே 27

800 ஆஸ்திரேலிய துருப்புக்கள் நேற்று தென்வியட்னமுக்கு அனுப்பப்பட்டன, வியட்காங் கொரில்லாக்களை எதிர்த்து இந்த வீரர்கள போரிடுவர்.

## 40 டன் குண்டுகள் போடப்பட்டன

சைகோன், மே 27

வடவியட்னமில் ரடார் நிலையங்கள், பெட்ரோல் நிலையங்கள் ஆகியவற்றை அமெரிக்க விமானங்கள் நேற்று 40 டன் குண்டுகளைப் பொழிந்து தாக்கின.

## பாக். விமானம் அத்துமீறல்

புதுடில்லி, மே 27

தனது வானப்பிராந்தியத்தில் பாகிஸ்தான் விமானம் ஒன்று மற்றோர் முறை மீறியதாக இந்தியா கடும் ஆட்சேபனை தெரிவித்திருக்கிறது.

கடந்த 19-ம் திகதி பஞ்சாபில் இச்சம்பவம் நிகழ்ந்ததாம்.

# வடவியட்னமில் 2வது ரஷ்ய ஏவுகணைத்தளம்

## மாஸ்கோ, பீகிங்குக்கு அமெரிக்கா எச்சரிக்கை

வாஷிங்டன், மே27

வடவியட்னும் தலைநகர் ஹானேய்க்கருமே இரண்டாவது ரஷ்யராக்கட்தளம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கும் அறிகுறி ஏற்பட்டிருக்கிறது என அமெரிக்க வெளிநாட்டு மந்திரி திரு டீன்ரஸ்க் கூறினர், ஏற்கனவே அங்கு முதலாவது ரொக்கெட் நிலையம் அமைக்கப்பட்டிருப்பது உறுதி என்றும் அவர் கூறினர்.

வடவியட்னும் விஷயத்தில் ரஷ்யா ஆழமாகத் தலையிட்டிருப்பதையே இது காட்டுகிறது எனக்கூறிய ரஸ்க், நிலைமையில் அபாயத்தைக் குறைவாக மதிப்பிடவேண்ட"மென ரஷ்யாவையும் சீனவையும் எச்சரித்தார்.

தென்வியட்னமில் அமெரிக்கா பாரதூரமான கடமைப் பொறுப்புகளைக் கொண்டிருக்கிறதென்றும், அதை நிறைவேறறியே தீரும் என்றும் அவர் மேலும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

டொமினிக்கன் குடியரசு பற்றி அவர் குறிப்பிடுகையில் அங்கு கம்யூனிஸ்டுகள் ஆட்சியைக் கைபபற்றும் சாத்தியம் குறைந்திருக்கிறது என்றார் ரஸ்க்.

## கண்கொடுத்த தெய்வத்துக்கு கண்ணுடி

திருமலை மே27

கண்கொடுத்த தெய்வத்துக்கு கண்ணுடியைக் காணிக்கையாக ஒரு பக்தர் வழங்கினர்,

கும்பகோணம் திருமதி ராஜலட்சுமி கண்பார்வை சரியாகத் தெரியாமலும் கண் கூச்சத்துடனும் வெய்யிலைப்பார்க்க முடியாமலும் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார்.

அவர் திருமலை வந்து பாபநாசத்தில் நீராடி ஸ்ரீ வெங்கடாசலபதியைத் தரிசித்தவுடன் கண்பார்வை திரும்பப் பெருளும், இறைவனது கருணையைப் போற்றி தமது மூக்குக் கண்ணுடியை ஸ்ரீ ஏழுமலையான் உண்டியலில் அவர் போட்டுவிட்டார்.

## 5 குழந்தைகளை கொன்ற தாய்

ஸ்பிரிங்பீல்ட், மே 27

26 வயதான ஒரு தாய் தனது 6 குழந்தைகளில் ஐந்தை கழுத்தை நெரித்துக் கொன்றதாகக் குற்றஞ் சாட்டப்பட்டாள், ஒரு வயதிலிருந்து ஆறுவயது வரையுள்ள குழந்தைகள் இவை,

ஏழு வயதான மற்றோர் குழந்தை அச்சமயம் பள்ளிக்கூடம்சென்றிருந்தது.

கழுத்தில்துவாய்களைப் போட்டு முறுக்கிய நிலையில் 4 ஆண் குழந்தைகளும் ஒரு பெண்குழந்தையும் கிடந்தன.

## விடுதலை யானவருக்கு மீண்டும் சிறை

வாஷிங்டன், மே 27

தனது மனைவியைக் கொலைசெய்ததாக ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு 10 வருடத்திற்குப்பின் சிறையிலிருந்து வெளிவந்த ஒரு டாக்டர் தனது புதிய மனைவியை விட்டுவிட்டு மீண்டும் சிறைக்கு செல்லும்மாறு உத்தர விடப்பட்டது.

7 வயதான மகனுக்குத் தாயாகவும் மீண்டும் கர்ப்பமுற்றுமிருந்த தனது மனைவியை 1954ம் ஆண்டு சாம்ஷெப்பர்ட் என்ற அவர் கொலை செய்ததாகத் தண்டிக்கப்பட்டார்,

ஆனல் இந்த விசாரணைக்கு அதிக பிரபல்யம் கொடுக்கப்பட்டதால் சரியான நீதி செய்யப்படவில்லை எனக்கூறி சென்ற ஆண்டு பெடர் நீதிபதி ஒருவர் அவரை விடுதலைசெய்தனர்.

விடுதலையானவுடன் 42 வயதான ஷெப்பர்ட் விவாகரத்துச் செய்த ஒரு ஜெர்மன்பெண்ணை மணந்தார். ஆனல் அப்பீல் கோர்ட்டில் பழைய தண்டனை ஊர்ஜிதமாயிற்று. எனவே மீண்டும் அவர் சிறை செல்லுமாறு உத்தர விடப்பட்டது.

ஆனல் சுப்பிரீம் கோர்ட்டுக்கு இப்போது வழக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. என்னவானலும் என் கணவரின்பக்கம் நான் நிற்பேன்என புதிய மனைவி கூறினர்.

## புகைபிடிப்பவர்களுக்கு ஓர் எச்சரிக்கை

பெர்லின், மே 27

இருதயநோய் நரம்புநோய் புற்றுநோய், குடலில் புற்று ஏற்படுதல் ஆகிய நோய்களும் புகைபிடிப்பதற்குமிடையே தொடர்புண்டென்பதை சர்வதேச ஆராய்ச்சிகள் நிரூபித்திருப்பதாக ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. ஜெர்மன் ஜனநாயகக்குடியரசில் புகைப்பிடிக்கும் பழக்கம் அதிகரித்திருப்பதைப் புள்ளி விபரத்துடன் அமைச்சு எடுத்துக்காட்டுகிறது.

புகைப்பிடிக்காதவர்கள் புகைப்பிடிப்பவர்களைவிட அதிககாலம் உயிர்வாழ்கிறர்கள். புகைபிடிப்பது வாலிபர்களுக்குப் பெரும் ஆபத்தை ஏற்படுத்தும் என்று அமைச்சு எச்சரிக்கிறது. (ஏ டி என்)

## சுவர்ண்சிங்

புதுடில்லி, மே 27

இந்திய வெளிநாட்டு மந்திரி சுவர்ண்சிங் அடுத்த மாதம் கென்யா, உகண்டா, தான்ஸினியா, எதியோப்பியா ஆகிய 4 ஆபிரிக்க நாடுகளுக்கு விஜயம் செய்வார்.

ஸ்ரீமதி லக்ஷ்மி மேனனும் பல ஆபிரிக்க நாடுகளுக்கும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் விஜயம் செய்வார்.

திரு. தினேஷ்சிங் பல தென் கிழக்காசிய நாடுகளுக்கு விஜயம் செய்வார்.

## "ஹிட்லர் திருச்சபைகளின் தந்தை"

லண்டன், மே 27

"அநேகமாக ஐரோப்பிய திருச்சபைகளின் தந்தை" என ஹிட்லரைக் கூறலாம் என்று வெஸ்ட்மினிஸ்டர் ஆர்ச் பிஷப் கருதினல் ஜோன் ஹீனன் கூறினர்.

"2-ம் உலக யுத்தத்தின் போது இங்கிலாந்து ஹிட்லரிடம் வீழ்ச்சியடைந்திருந்தால் திருச்சபைகளின் ஒற்றுமை மேலும் முன்னேறியிருக்கும்" என்றும் அவர் கூறினர்.

ஜெர்மனியில் மட்டுமின்றி ஹாலந்து, பிரான்ஸ், பெல்ஜியம் ஆகிய நாடுகளிலும் கிறிஸ்தவர்களை ஒன்றுபடும்படி ஹிட்லர் நிர்ப்பந்தித்தார். இதன் பலனகவே யுத்தத்திற்குப் பின் ஐரோப்பிய கத்தோலிக்கர்களும், புரடெஸ்டண்டுகளும்சகோதர்களாக வெளி வந்தன" என அவர் மேலும் கூறினர்.

வாஷிங்டன், மே 27

ரன் பகுதியில் சண்டைநிறுத்தம்பற்றி பிரிட்டன் மேற்கொண்டிருக்கும் முயற்சியை அமெரிக்கா வரவேற்கிறது என வெளிநாட்டு மந்திரி ரஸ்க் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மறைந்தும் 'விடிவெள்ளி'யாக திகழ்கிறார்"

## முந்தையா நினைவு தினக்கூட்டத்தில் அஞ்சலி

யாழ்ப்பாணம், வெள்ளி

"காலஞ்சென்ற திரு. முத்தையா அவர்கள் தமிழாசிரியர் குலத்தின் வழிகாட்டி; எழுத்தாளர்களின் குலதெய்வம்" என்று டாக்டர் எஸ். சிவஞானசுந்தரம் (நந்தி) எழுத்தாளரும், கவிஞரும், தலைமை ஆசிரியருமாக இருந்து மறைந்த திரு. க. பே. முத்தையாவின் ஓராண்டு நினைவுதின விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

நல்லூர் சாதனா பாடசாலை மண்டபத்தில் பழைய மாணவர் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட இவ் விழாவுக்கு நல்லூர் சாதனா பாடசாலை தலைமை ஆசிரியர் திரு. சா. செல்லையா தலைமைவகித்தார்.

டாக்டர் சிவஞானசுந்தரம் மேலும் குறிப்பிட்டதாவது:-

"ஒரு பாராளுமன்ற உறுப்பினர் தனது தொகுதிக்குச் செல்லும் எவ்வளவு வரவேற்பும் மதிப்பும் கிடைக்குமோ அதேயளவு மதிப்பும் வரவேற்பும் திரு. க. பே. முத்தையா அவர்கள் அவரது ஊருக்குச் போகும் போதெல்லாம் கிடைத்த காட்சியை கண்ணால் கண்டிருக்கிறேன். அவரை ஓர் தந்தைபோல் மதித்து தமதுகஷ்ட நஷ்டங்களை அவ்வூர் மக்கள் அவரிடம் தெரிவித்தனர். இத்தனைக்கும்காரணம் அவர் மற்றவர்களுக்காக எதையும் செய்யக்கூடிய தியாக சிந்தை கொண்டிருந்தது தான்.

திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்) பேசுகையில் கூறியதாவது:-

"தனக்காக வாழாது பிறருக்காக திரு. முத்தையா அவர்கள் வாழ்ந்தபடியால் தான் அவர் இறந்தும் 'விடிவெள்ளி'யாகத் திகழ்கிறார். அவர் கள்ளங்கபடம் சிறிதுமில்லாமல் தூய்மையான உள்ளத்துடன் எல்லாருடனும் பழகினார்; அதனால்தான் அவர் இன்றும் அழியாது எல்லார் மனதிலும் வாழ்கிறார்.

தன்னம்பிக்கைதான் அவரை வளர்த்தது. அவர் ஒரு எழுத்தாளராக, கவிஞராக, ஆசிரியராக இருந்து சமூகத்தில் பலவிதமான மாற்றங்களை ஏற்படுத்தினார்.

திரு. மகாதேவர (தேவன்) பேசுகையில் கூறியதாவது:-

"பேனா பிடித்து எழுத்தாளனாகவிருந்து பல கவிதைகள் படைத்ததன் மூலம்தான் திரு. முத்தையா மறைந்தும் மறையாது வாழ்கிறார் என்று சொல்வது தவறானதொன்று. அவர் வேறெதுவும் செய்யாது கவிதைகளை மட்டும் எழுதிக் குவித்திருந்தால் இன்று அவர் எம்மத்தியில் நிலைத்திருக்க மாட்டார். சமூக சேவைகளில் அவர் ஈடுபட்டு பிறருடைய சுக துக்கங்களில் பங்கு கொண்டதன் விளைவாகத்தான் அவர் அழியாது எம் மத்தியில் வாழ்ந்துகொண்டிருக்கிறார். கள்ளமற்ற தூய வாழ்வு வாழ்ந்தார். அதனால் இறந்தும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்."

திரு. கே. டானியல் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

"திரு. முத்தையா அவர்களுடைய கவிதைகள் சமுதாயத்தில் நடக்கும் அன்றாட நிகழ்ச்சிகளின் படப்பிடிப்பு அவருடைய ஒவ்வொரு எழுத்துக்களிலும் சமூகத்தில் நடைபெறும் கொடுமை, தொல்லை, வறுமை ஆகியன சித்தரிக்கப்பட்டுள்ளது. தமது கவிதைகள் மூலம் பலவிதமான நல்ல கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்பியிருக்கிறார்" என்று கூறினார்.

ஆசிரியை செல்வி கு. துரையப்பா பேசுகையில்; 'அனுபவம்தான் ஒருவரைச் சிறந்த ஆசிரியராக்குகிறதென்ற உயர்ந்த உண்மையை உணர்த்தியவர் திரு. முத்தையா தான்' என்றார்.

திருவாளர்கள் ஏ. வி. தம்பிராசா, ப. செல்வநாதன், பூ. புலேந்திரராஜா ஆகியோரும் உரை நிகழ்த்தினர். பா. ஞானசபாபதி நன்றி கூறினர்.

## எதிரிகளுக்கு தண்டனை

யாழ்ப்பாணம், வியாழன்

இணுவிலைச் சேர்ந்த எஸ். மருதலிங்கம் என்பவருக்கு படுகாயம் விளைவித்ததாக நடேசரத்தினம் கோவிந்தசாமி, நடேசரத்தினம் சின்னராசா உலகசுந்தரம் இராமலிங்கம் ஆகியோர்மீது சுன்னாகம் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் மாஜிஸ்ரேட் திரு. ஜி. எவ். ஏச். அந்துறுப்பானு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மாஜிஸ்ரேட் எதிரிகளைக் குற்றவாளிகளாகக் கண்டு முதலாம் இரண்டாம் எதிரிகளுக்கு ஒன்பது மாதம் கடுங்காவல் தண்டனை விதித்தார். அத்துடன் 100 ரூபா அபராதமும் விதித்தார். மூன்று கிழமை கிழமை கடூழியத் தண்டனை விதிக்கப்பட்டது.

மூன்றாவது எதிரிக்கு 60 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. இதுகொடுக்கத் தவறின் 3 கிழமைகள் கடூழியச் சிறைத் தண்டனை என்றும் மாஜிஸ்ரேட் உத்தரவிட்டார்.

எதிரிகள் தரப்பில் திரு. ஆர். கண்ணுத்துரை புரக்டர் திரு. பி. தம்பிரத்தினம் அனுசரணையுடன் ஆஜரானார்.

சுன்னாகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். வி. மூர்த்தி வழக்கை நடத்தினார்.

## நாமதத்தைபோக்க நடவடிக்கை

கொள்ளுப்பிட்டி, வியாழன்

தபால் தந்திச் சேவைகளின் முன்னேற்றம் பற்றிக் கலந்தாலோசிப்பதற்காக, நாளை வெள்ளிக்கிழமை வர்த்தக சங்கத்தின் பிரதிநிதிகளும், தபால்—தந்திச் சேவை இலாகாக்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்களும் சந்திக்கவிருக்கின்றனர்.

ஆலோசனைக்கு எடுக்கப்படும் விஷயங்களுள் மேலதிக நேர வேலை செய்யும் நேரங்களைக் குறைத்து, செய்திகளை அச்சில் எடுக்கும் இயந்திரங்களை அதிகமாக்குவதும் ஒன்றாகும். ஊழியர்கள் வேலைக்கு கிழமை நாட்களிற் போகாமல் இருப்பது பற்றியும் 'இடைநேர ஓய்வு' எடுப்பதுபற்றியும் தந்தித் தலைமைக் காரியாலயத்தில் கூட்டம் நடைபெறவிருக்கின்றது.

ஒருநாள் 'சம்பளலீவு' எடுத்துவிட்டுதூரத்திலுள்ள இருப்பிடங்களுக்குச் செல்கிறார்கள் இந்தத் தந்தி ஊழியர்கள் என குறைகூறப்பட்டுள்ளது. அங்குள்ள ஆண்களும், பெண்களும் அரை மணித்தியாலம் அலைந்து ஒரு மணித்தியாலத் தேவைக்கு, சுகயீனத்தைக் காரணங்காட்டி லீவுஎடுக்கின்றனர் என்றும் கூறப்படுகின்றது.

## வருடாந்த உற்சவம்

தொல்புரம், வியாழன்

தொல்புரம் கொட்டடிப்பதியிலுள்ள ஆதி முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் அண்மையில் ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்று வருகிறது. தினமும் உற்சவ தினங்களில் அம்பாள் வீதி வலம் வருகையில் தொல்புரம் [illegible] சி. வரதராசா தலைமையில் பஜனை நடைபெற்றுவருகிறது. அநேக மாணவ மாணவிகள், பெரியோர்கள் உட்படப்பலர் கலந்து கொள்கின்றனர். உற்சவம் சனிக்கிழமை முடிவடையும்.

திட்டவட்டமான

# கொள்கைகளை முன்வைத்தே அரசாங்கத்தில் சேர்ந்தோம்

## வரவேற்புபசாரக் கூட்டத்தில் திரு. அமிர்தலிங்கம் விளக்கம்

குரும்பசிட்டி, வியாழன்

"தமிழ்பேசும் இனத்தின் உரிமைகளை மீட்கவேண்டிய இந்த நேரத்திலே சில நண்பர்கள் எமக்கிடையே வேற்றுமைகளையும், பிளவுகளையும் வளர்க்கும் நிலையில் ஈடுபட்டுக்கொண்டு வருகிறார்களென அறியும்போது நாம் வெட்கப்படவேண்டிய நிலையில் இருக்கின்றோம். தமிழரசுக்கட்சிக்கும் ஐக்கியதேசியக் கட்சிக்குமிடையே ஏற்பட்ட ஒப்பந்த உடன்பாட்டை உடைத்தெறியும் முயற்சியில் சிலர் ஈடுபட்டு வருகின்றனர். தமிழ்க்காங்கிரஸ் தமது ஒரே ஆயுதமான வட்டமேசை மகாநாடு வேண்டுமென இன்னும் கூறுகிறது. தேசிய அரசாங்கத்தை முறியடிக்கும் முயற்சியில் வேகமாக ஈடுபடும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, லங்கா சம சமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியனவற்றை வைத்துக்கொண்டு பிரச்சினைகளைத் தீர்க்கமுடியுமென்று திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கருதுகிறாரா? வட்டமேசை மகாநாடு மூலம் பிரச்சினைகளை இன்னும் குழப்பிவிடும் எண்ணத்தை திரு. ஜி. ஜி. கைவிட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்." இவ்வாறு ஊர்காவற்றுறை எம்.பி. திரு வி. நவரத்தினம் தமிழரசுக்கட்சி எம். பி.க்களுக்கு வசாவிளானில் அளிக்கப்பட்ட வரவேற்புபசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையில் கூறினார். திரு. வ. இராசநாயகம் இவ்வரவேற்பு விழாவுக்குத் தலைமைதாங்கினார். வசாவிளான் அரசினர் மத்திய கல்லூரி திறந்தவெளி மைதானத்தில் புதன்கிழமை இரவு மேற்படி வரவேற்புவிழா நடைபெற்றது.

திரு. வ. நவரத்தினம் எம். பி. மேலும் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:

"தேசிய அரசாங்கம் அமைக்கப்படும்போது யூ. என். பி. எம். ஈ. பி. ஸ்ரீலங்கா சுதந்திர சோஷலிஸ்ட் கட்சி ஆகியன உட்பட எமது கட்சியினரும் சேர்ந்து உருவாக்கிய நகல் திட்டமொன்றில் கையெழுத்துப் போட்டு திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஆதரவுகொடுத்த பின்பு ஒப்பந்த விபரங்கள் என்னவென்று கேட்பது விந்தையானது. இந்த நகல் மகாதேசாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்ட பின்புதான் தேசிய அரசாங்கம் உருவாக்கப்பட்டது. எனவே திரு. ஜி. ஜி.க்கு ஒப்பந்த விபரங்கள் நன்கு தெரிந்துகொண்டபின்பும் வேண்டுமென்று குளிப்பியடிக்க முயல்கிறார். அதுமட்டுமல்லாதுசிம்மாசனப்பிரசங்கத்தில்கூட எமது கோரிக்கைகளில் சில அமுல்நடத்தப்படுமென வாக்குறுதியும் அளிக்கப்பட்டது. தமிழ் மக்கள் விழிப்புணர்ச்சியுடன் செயலாற்றவேண்டிய சந்தர்ப்பம் இது. தமிழ்ப் பொதுமக்கள் மட்டுமல்ல தமிழ்ப் பிரதிநிதிகள்கூட ஒற்றுமையுடனும், உறுதியுடனும், விழிப்புணர்ச்சியுடனும் கடமை புரியவேண்டிய தருணம். எனவே எமக்கிடையேயுள்ள பூசல்கள் வேறுபாடுகளை ஒழித்துவிட்டு ஒன்றாகச் செயலாற்ற முற்படுவோம்."

வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் பேசும்போது "கடந்த காலங்களில் அரசாங்கங்களுடன் ஒத்துழைத்து மந்திரிப்பதவி வகித்தவர்கள் நிபந்தனைகள் எதுவுமின்றி ஸ்தாபன ரீதியாக அல்லாமல் தமது சொந்த நலன்களில் அக்கறைகொண்டு சேர்ந்திருந்தனர். ஆனால் திரு திருச்செல்வம் தமிழரசுக்கட்சியின் சார்பாகவும், தமிழ் பேசும் இனத்தின பிரதிநிதியாகவும் சில திட்டவட்டமான கொள்கைகளை முன் வைத்து தேசிய அரசாங்கத்தில் சேர்ந்துகொண்டார். ஆங்கிலேய ஆட்சிக்காலத்தில் தமிழர் அனுபவித்த உரிமைகள் சிங்கள அரசாங்கங்களின் காலத்திலே பறிக்கப்பட்டுவிட்டன. இந்நிலையில் தமிழினம் மேலும் தனது உரிமைகள் பறிபோகாமல் ஒரு தனி இனமாக வாழவேண்டுமானால் இந்நாடு சமஷ்டி அமைப்பில் இயங்கவேண்டும். சமஷ்டிக் கட்சி அரசாங்கத்துடன் ஒத்துழைத்து உரிமைகள் பெறும் நேரத்தில் இலட்சியத்தைக் கைவிடாது தொடர்ந்து போராடும். பாராளுமன்றத்தில் அரசியல் நிர்ணயக் கமிஷன் தெரிவுக்குழு நியமிக்கப்படவேண்டுமென்ற விவாதத்தில் நாம் எமது சமஷ்டிக் கொள்கையைக் கைவிடாது சமஷ்டி மூலமாகத்தான் சிறுபான்மையினர் பிரச்சினைகள் தீர்க்கப்படலாமென வற்புறுத்தினோம். இதேநேரத்தில் யூ. என். பி. சார்பில் ஒற்றையாட்சித்திட்டமே இலங்கைக்குத் தேவையானதெனக் கூறப்பட்டது. இதிலிருந்து தேசிய அரசாங்கத்தில் நாம் சேர்ந்துள்ளபோதிலும் எமது கொள்கைகளைக் கைவிடவில்லையென்பதை அறிந்துகொள்ளலாம்" என்றார்.

காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம்; கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேற்பிள்ளை ஆகியோருட்பட வேறு பலரும் இக்கூட்டத்தில் உரை நிகழ்த்தினர். கூட்டம் ஆரம்பமாகுமுன்னர் பாராளுமன்ற உறுப்பினர்கள் வசாவிளான் சந்தியிலிருந்து ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர்.

## விவேகானந்தசபை மீதான வழக்கு தள்ளுபடி

### அப்பீல் செய்யப்பட்டது

பம்பலப்பிட்டி, வியாழன்

கொழும்பு விவேகானந்த சபைக்கு எதிராக புதுச்செட்டித்தெருவைச் சேர்ந்த வி. சிவபாலசிங்கம் என்பவரால் தொடரப்பட்ட வழக்கு நேற்று கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது வழக்கைத்தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்பட்டது. வழக்குச் செலவைச் சங்கத்துக்கு திரு. சிவபாலசிங்கம் செலுத்த வேண்டுமெனவும் மாவட்டநீதிபதி திரு. என். சிவஞானசுந்தரம் உத்தரவிட்டார்.

1964-ம்ஆண்டு ஜூலைமாதம் முதலாம் திகதி நடைபெற்ற சபையின் கூட்டம் செல்லுபடியாகாதெனவும், தன்மீது விதிக்கப்பட்ட தடை செல்லுபடியாகாதெனவும் 1964-ம் ஆண்டு ஜூலை மாதம் 19-ம் திகதி தெரிவுசெய்யப்பட்ட நிர்வாக சபைக்கும் விவேகானந்தசபைக்கும் எவ்விதசம்பந்தமுமில்லையெனக்கோரி திரு. சிவபாலசிங்கம் வழக்குத் தாக்கல்செய்திருந்தார்,

மாஜிஸ்டிரேட் கோர்ட்டின் தீர்ப்பை எதிர்த்து திரு. சிவபாலசிங்கம் அப்பீல்செய்துள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூ. மொ. வி.யின்

# சில்லறை விற்பனை நிலையங்களை ப. நோ. கூ. சங்கங்கள் கையேற்கும்

குரும்பசிட்டி, வியாழன்

காடெல்கிளுமுள்ள கூ. மொ. வி. நிலைய சில்லறைக்கடைகளில் பலவற்றையும் பலநோக்குக்கூட்டுறவுச்சங்கங்களிடம் ஒப்படைக்கும் திட்டமொன்றினை வர்த்தகமந்திரி திரு. எம். வி. பி. பீரிஸ் ஆராய்ந்து வருகின்ருர்.

கூட்டுறவு மொத்த விற்பனை நிலைய யாழ்ப்பாணக் கிளையின் சில்லறைக்கடைப் பிரிவு அடுத்த மாதம் முதல் மூடப்பட விருக்கின்றது. பொதுமக்கள் பலர் செய்துகொண்ட புகார்களையடுத்து கொழும்பிலிருந்து அண்மையில் வந்திருந்த கூ. மொ. வி. பகுதி அதிகாரிகள் யாழ். மாவட்டத்திலுள்ள கூ. மொ. வி. நிலையங்களில் நிலவும் சீர்கேடுகளையும் குறைபாடுகளையும் நேரில் விசாரித்து அறிந்துகொண்டனர். யாழ்ப்பாண பலநோக்குகூட்டுறவுச் சங்க சமாஜத்திடம் இந்நிலையத்தைக் கையளித்துவிடாத்தக் கூடிய சாத்தியக்கூறுகளை தற்போது ஆராயும்படி உதவிக் கூட்டுறவு ஆணையாளர் கேட்கப்பட்டுள்ளார்.

---

## இடமாற்றம்

மாகோ, புதன்

மகோவின் விவசாயப் போதனாசிரியராகக்கடமையாற்றிய திரு. எஸ். தாமோதரம்பிள்ளை இம்மாதம் முதல் திகதியிலிருந்து மட்டக்களப்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

REGAL - JAFFNA
NOW SHOWING
TABHUNTER
in
THE GOLDEN ARROW
(Technirama - Technicolor)

## சமூகசேவை மந்திரியின் நோக்கம்

பட்டலப்பிட்டி, வியாழன்

தேசிய லொத்தர் சபையினால் பெறப்படும் பணத்தை சமூகசேவைக்கு செலவிட வேண்டுமென சமூகசேவை மந்திரி திரு. அசோகா கருணரத்ன அபிப்பிராயம் கொண்டுள்ளார்.

திடீரென ஏற்படும் சூறாவளி, வெள்ளம், வரட்சி இவற்றினால் பாதிக்கப்படும் மக்களுக்கு இப்பணம் உதவக்கூடிய முறையில் வழிவகுக்க பட வேண்டுமெனை திரு. கருணரத்ன மற்ற மந்திரிகளைக் கேட்டுள்ளார்.

சமூக சேவைக்கென ஒதுக்கப்பட்டுள்ளநிதி இந்த சேவைக்குப் போதியதாக இல்லாத காரணத்தினாலேயே இவ்வித அபிப்பிராயம் தெரிவிக்கப்படுவதாக சமூகசேவை இலாகா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

---

## சைக்கிள் ஓட்டப்போட்டி

கோப்பாய், வியாழன்

புத்தூர் விக்னேஸ்வரா சைக்கிள் ஓட்டக் கழகத்தின் ஆதரவில் கடந்த புதன்கிழமை காலை 7 மணிக்கு கோப்பாய்ப் பொலிஸ் அதிபர் திரு. ஜேட் டிறிகோ தலைமையில் சைக்கிள் ஓட்டப்போட்டி நடைபெற்றது.

கோப்பாய்ப் பிரதிநிதி திரு. கதிரவேற்பிள்ளையும் விளையாட்டு வைபவத்துக்கு சமூகமளித்திருந்தார்.

போட்டியில் வெற்றி பெற்றோருக்கு வட்டுக்கோட்டைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கம் பரிசில் வழங்கினுர்.

வெற்றிகரமான 2வது வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) விஜிதா (ஹட்டன்) தீவோலி (நுவரெலியா)
லக்ஷ்மி (இரத்தினபுரி) மொடேர்ன் (பதுளை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி பிற்பகல் 2-30, 6-30, 9-30
சனி, ஞாயிறு 10-30 பி. ப. 2-30 6-30 9-30



★ சிவாஜி கணேசன்
★ எஸ். எஸ். ராஜேந்திரன்
★ விஜயகுமாரி
மற்றும் பலர் நடித்த
பச்சை விளக்கு

## சனசமூகநிலையம் வெற்றி

தொல்புரம், வியாழன்

தொல்புரம் மத்தியசனசமூக நிலைய வாசிகசாலை இளைஞர் விளையாட்டுக் கழகக் கோஷ்டிக்கும், வட்டுக்கோட்டை இளைஞர் விளையாட்டுக் கழகக் கோஷ்டிக்குமிடையே அண்மையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் தொல்புரம் மத்திய சனசமூக நிலைய இளைஞர் கோஷ்டி தரிதமாக விளையாடி வெற்றியீட்டியது.

---

## கொழும்புத் திட்டசபையின் புதிய தலைவர்

பம்பலப்பிட்டி, வியா.

கொழும்புத் திட்டசபையின் நடப்புவருடத் தலைவராக இலங்கையிலுள்ள இந்திய ஹைகமிஷனர் திரு. பீம்ஷன் சாச்சார் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். கடந்த வருடத் தலைவராக இலங்கைப் பிரதிநிதி திரு. திலக் ஈ. குணரத்ன கடமையாற்றினுர்.

திரு. சாச்சாரின் பெயரை இலங்கைப் பிரதிநிதி டாக்டர் ஜே. பி. ஹெனிகம பிரேரிக்க பர்மாத் தூதர் திரு. சவோ பூன்வாட் அனுவதித்தார். கனடா, பிரிட்டன், மாலைதீவு, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, ஜப்பான் ஆகிய நாட்டுப் பிரதிநிதிகளும் இதற்கு ஆதரவு தெரிவித்தார்கள்.

---

## 35-வது ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் "கமர்ஷியல் டியூட்டரி"யின் 35-வது ஆண்டு விழா சமீபத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

திரு. வி. டி. பெரேராவின் தலைமையில் அமைக்கப்பட்டிருந்த கொண்டாட்டக் கமிட்டி இதுசம்பந்தமான நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்திருந்தது.

1930-ம் ஆண்டு மே மாதம் 23-ந் திகதி இந்த வர்த்தகக் கல்வி நிலையம் திரு. ஜே. டபிள்யு அலெக்ஸாண்டரினுல் ஸ்தாபிக்கப்பட்டது. முதல் கடந்த 35 ஆண்டுக் காலத்தில் சுருக்கெழுத்து, தட்டெழுத்து, புக்கீப்பிங் போன்ற பல துறைகளில் ஆயிரக்கணக்கான மாணவர்களும், மாணவிகளும் இங்கு பயிற்சி பெற்றிருக்கிறுர்கள்.

கொண்டாட்டம் சம்பந்தமாக நடைபெற்ற விருந்திலும் புகைப்பட நிகழ்ச்சியிலும் ஏராளமான பழைய மாணவர்களும், புதிய மாணவர்களும் கலந்துகொண்டனர்.

வைபவம் இரு தினங்கள் நடைபெற்றது.

---

## வானெலி நிகழ்ச்சிகள்

வெள்ளி 28-5-65

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

காலை 6-45 காதாஞ்சலி, 6-50 சைவசந்சிந்தனை, 6-55 இஸ்லாமியசந்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 தோத்திரப்பாடல்கள், 8-00 தேர்ந்த இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம். 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 காதல் வரம்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 ஞானஞ்சலி, 7-15 பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சிகள், [illegible] 8-30 [illegible] 10-00 [illegible], 10-15 தேர்ந்த இசை.

## அராலி ஆவரம்பிட்டி முத்துமாரியம்பாள் நவோத்ர சகஸ்ர சங்காபிஷேகம்

அடியார்களுக்கு விசேட அறிவித்தல்.

அபிமானிகாள்!

நிகழும் விசுவாவசு வருஷம் வைகாசி மாதம் 16-ம் திகதி சனிக்கிழமை (29-5-65) ஆதிரக சேர்க்கை நிகழ்வதனுல் அவற்றின் தோஷ பரிகார விசேட வழிபாட்டின் நிமித்தம் அன்று மாலை தொடக்கம் சகஸ்ர சங்குபூசை, விசேட பஞ்சகுண்ட ஹோமம் நடைபெற்று வழக்கம்போல 31-5-65 சோமவாரம் (திங்கள்) காலை பூர்ணகுதி முதலிய சிறப்புக் கிரியைகளுடன் பகல் பத்துமணியளவில் அபிஷேகமும் தொடர்ந்து மகேஸ்வர பூசை அன்னதானமும் நடைபெறும்.

இரவு விசேட பூசைகளுடன் தண்டிகைத் திருவுலாவு நடைபெறும். அக்காலங்களில் அடியார்கள் யாவரும் சமூகமாய்த் தரிசித்து இட்டசித்திகளைப் பெறும்வண்ணம் விநயத்துடன் அழைக்கின்ருேம்.

இசையாளர் சங்க ஆதரவில் மேளவாத்தியம் ஆதியனவும் நடைபெறும். இங்ஙனம்,

அம்பாள் அடியார்கள். 327

---

### வாடகைக்கு அல்லது விற்பனைக்கு

2-ம் குறுக்குத்தெருவில் 83-ம் இலக்கங்கொண்ட கிட்டங்கி வாடகைக்கு அல்லது விற்பனைக்கு இருக்கிறது. சகலதேவைகளுக்கும் பயன்படக்கூடியது. விபரங்களுக்கு: க. பத்மநாதன், 10, பிரப்பங்குளம் வீதி, யாழ்ப்பாணம். 324

---

### தேவை

தையல்வேலை செய்யக்கூடிய பெண்கள் தேவை. டிப்போசிட் பணம் ரூபா 500/-. ரொக்கம் கட்டக்கூடியவர்களுக்குத் திறமைக்கேற்ற மாதச் சம்பளம் கொடுக்கப்படும். 28, 29ம் திகதிகளில் நேரில் சமுகம்கொடுக்கவும். கைத்தொழில் பகுதி, C/o. தமிழ்நேசன் பத்திரிகை அலுவலகம், 80, 82 பேங்ஷால் வீதி, யாழ்ப்பாணம். 326

---

வெளியூர்களில் வானில் சென்று விற்பனை செய்யக்கூடியவர் தேவை. ரொக்கப்பிணை ரூ. 1600/- உறுதிப் பிணை ரூ. 1000/- நேரில் வரவும் வடபகுதி வர்த்தக நிலையம், ஸ்ரேசன் ரோட், சுன்னுகம். 332

---

கண்டி, மாத்தளை, இரத்தினபுரிக்கு ஏஜேன்சீ பர்கள் தேவை. காசுப்பிணையாக ரூ 3000/-, உறுதிப் பிணையாக ரூ. 2000/- நேரில் வரவும், வடபகுதி வர்த்தக நிலையம், ஸ்ரேசன் ரோட், சுன்னுகம். 333

---

பெண் குமாஸ்தா உடனடியாகத் தேவை. நேரில் வரவும். வடபகுதி வர்த்தக நிலையம், ஸ்ரேசன் ரோட், சுன்னுகம். 331

---

### கல்வி

ஜி. சி. இ. சாதாரணப்-வர்த்தக வகுப்புகள் தற்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. உடனே சேருங்கள். யுனைட்டெட் இன்ஸ்ரியூஷன், கெலிவயடி, கரவெட்டி. 107, பருத்தித்துறை வீதி யாழ்ப்பாணம். 321

---

## தட்டுப்பாடு

பம்பலப்பிட்டி, வியாழன்

பம்பாய் வெங்காயம், மாவு, வெண்ணெய் (பட்டர்) ஆகிய உணவுப் பொருள்களுக்கு இலங்கையின் பல பகுதிகளில் பொதுவாக தட்டுப்பாடு இருந்துவருவதாக அறியப்படுகிறது.

## யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரி மாணவர் சகுதி

### ஜி. சி. ஈ. உயர்தர வகுப்புகள்

ஜி. சி. ஈ. சாதாரணப் பரீட்சையில் ஏககாலத்தில் ஏதாவது பாடங்களில் மூன்று திறமைச் சித்திகளுடன் ஐந்து பாடங்களில் அல்லது இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்தோர் ஜி. சி. ஈ. உயர்தர முதலாம் வருட வகுப்புகளில் சேரலாம்.

இதுபற்றிய விபரங்களை மே மாதம் 29-ம் திகதி சனிக்கிழமை காலை 9—12 மணிக்குமிடையே நேரடியாக அறிந்துகொள்ளலாம்.

பதிவாளர்

வட்டுக்கோட்டை

27—5—65 183

---

### தேவை

செசவு வேலை நன்கு தெரிந்த பெண்பிள்ளைகள் தேவை. போடிங் வசதி உண்டு. திறமைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும். விபரங்களுக்கு: அன்னம்ஸ் சாறி வேக்ஸ், 27, மின்சார நிலையவீதி, விக்னேஸ்வரா மேல்மாடி, யாழ்ப்பாணம். அல்லது அன்னம்ஸ் சாறி இன்டஸ்றீஸ்; கோவில்வீதி, கொக்குவில். 330

---

### விற்பனைக்கு

பருத்தித்துறை காரியாதிகாரி கந்தோர், இ. போ. ச டிப்போ, கந்தசாமி கோவில் ஆகியவற்றிற்கு அருகாமையில் சகல வசதிகளுடன் வீடும் காணியும் விற்பனைக்குண்டு, விபரங்கட்கு C/o இலட்சுமி பதி புலோலி கிழக்கு பருத்தித்துறை 312

---

வீட்டுக்குரிய மரங்கள்-திறமானதும் துப்புரவாக வெட்டினதுமான பனை மரங்கள் 4 முழம் தொடக்கம் 14 முழம் வரை சலாகைகள்: 4 முழம் தொடக்கம் 12 முழம் வரை. பாலைமரம்: 18 அடி நீளம் 6×4 18 அடி நீளம் 4×3 குறைந்த அளவுகளிலும் பெறலாம். சகாயவிலை. கிடைக்குமிடம் பத்திமா மூலிவு சொரிவு வைத்தியசாலை ஊர்காவற்துறை. 318

---

இயந்திரங்களால் இயக்கப்படும் 30×9 1/2, 28×8 1/2 27 1/2 × 8 (மூன்று) அளவுகளைக் கொண்ட சுன்றலன்டர் மாதிரி ஐந்து புதிய வள்ளங்கள்- இரண்டு இலுப்பை பலாமரத்தாலும் மூன்று பனைமரத்தாலும் செய்யப்பட்டவை- இயந்திரங்கள் பூட்டப்படாதவை. கடன் வசதி ஒழுங்கு செய்யலாம். வடமாகாணம் கீழ் மாகாணக் கடலில் பாவனைக்கு மிகவும்சிறந்தவை. தற்போது இந்த வள்ளங்கள் பல பாவிக்கப்படுகின்றன. விபரங்களுக்கு எழுதவும்.

G. A. Peter Fernando, 86, Delasalie Street, Matwal. 245

---

### கல்வி

பி. ஏ., ஜி. ஏ. கியு., ஜி. சி. ஈ. (உயர், சாதாரண) தரங்கள், கலை, விஞ்ஞானம்; தமிழ், ஆங்கில வர்த்தக வகுப்புக்கள்; சிங்களம்; மத்திய எழுதுவினைஞர் வகுப்பு; அப்போதிக்கரிப் புகுமுக வகுப்பு; ஆசிரிய கலாசாலை பிரவேச வகுப்புக்களுக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

யாழ்: டியூட்டோறியல் கல்லூரி, கைலாசபிள்ளையார் கோவிலடி, நல்லூர், யாழ்ப்பாணம். 328

---

### ஆங்கில வகுப்புக்கள்

க. பொ. த. சாதாரண வகுப்புக்கும், ஆங்கில ஆசிரிய பயிற்சிக்கும் ஆங்கில பாடங்கள் மாலை நேரங்களில் போதிக்கப்படும். நேரில் விண்ணப்பிக்கவும். மா. புவனேந்திரன், வர்த்தக கல்வி நிலையம், திருநெல்வேலி. 315

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேரி வாசிகளுக்கு நிரந்தர வீடுகள்

## கட்டட வேலைகளைத் துரிதமாக ஆரம்பிக்குமாறு மந்திரி உத்தரவு

கொழும்பு, புதன்

கொழும்பிலுள்ள சேரி வாசிகளுக்கு நிரந்தரமான வீடுகளை அமைத்துக்கொடுக்க தொழில், வீடமைப்பு மந்திரி திரு. எம். எச் முகமது நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இது சம்பந்தமான கட்டிட வேலைகளை ஆரம்பிக்குமாறு மந்திரி ஏற்கனவே உத்தரவிட்டுள்ளார். ஆரம்பத்தில் ஒரு மாதிரி வீடமைப்புத் திட்டம் உருவாகுமெனவும் இதன் பின்னர் துரிதமான முறையில் வீடுகள் அமைத்துக்கொடுக்கப்படுமென்றும் மந்திரியின் அறிக்கையொன்று கூறுகின்றது. மாதிரி வீடமைப்புத் திட்டம் வெற்றியைக் கொடுத்தால் கொழும்பின் பல பகுதிகளிலும் இப்படியான பல வீடுகள் நிறுவப்படும்.

வீடுகளைக் கட்டுவதற்கு வேண்டிய செங்கற்களை உற்பத்தி செய்வதற்கு "கெயர்" ஸ்தாபனம் மூன்று இயந்திரங்களைக் கடனாக உதவியுள்ளது. ஒவ்வொரு வீட்டையும் கட்டி முடிப்பதற்கு 2,150 ரூபா செலவாகுமென்றும் இது சகல வசதிகளையும் கொண்டிருக்குமென்றும் அறிவிக்கப்பட்டது.

---

# பாடசாலை அதிபர்களுக்கு கல்வி அதிபர் சவால்!

## "சுய வகுப்பேற்றம் வழங்க கல்விஇலாகா உத்தரவிட்டதா?"

கொழும்பு, புதன்

மாணவர்களை சுயமாக வகுப்பேற்றவேண்டும் என்று கல்வி இலாகா எந்த நேரத்திலும் பாடசாலை அதிபர்களுக்கோ, அல்லது தலைமையாசிரியர்களுக்கோ உத்தரவிடவில்லை எனவும் அப்படிக் கூறும் சுற்றுநிருபம் எதுவும் இருந்தால் தம்மிடம் சமர்ப்பிக்க முடியுமா எனவும் கல்வி அதிபர் கல்லூரி அதிபர்களைக் கேட்டுள்ளார்.

கடந்த டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற க. பொ. த. சாதாரண பரீட்சையில் கூடுதல் சதவிகித மாணவர்கள் சித்தியடையாமல் விட்டதற்கு காரணம் அவ்வகுப்பேற்றமே தான் எனப் பாடசாலை அதிபர்கள் வெளியிட்ட கருத்துப் பற்றிக் குறிப்பிடுகையிலேயே கல்வி அதிபர் திரு. ஈ. எச். டி. அல்விஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மாணவர்களுக்கு சுயவகுப்பேற்றம் வழங்கவேண்டும் என்று கல்விஇலாகா எந்த நேரத்திலும் சுற்றுநிருபம் எதையும் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பிவைத்ததில்லை என்றும் கல்விஅதிபர் தெரிவித்தார்.

மாணவர்களுக்கு சுயவகுப்பேற்றம் வழங்கவேண்டும் என்று உத்தரவிடும் கல்வி இலாகாவின் சுற்றுநிருபம் எதுவும் இருந்தால் தம்மிடம் அதைக் காட்டுமாறு தான் அவர்களைக் கேட்டுக்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார், பாடசாலை அதிபர்களும், பெற்றோர்களும் பிழையானமுறையில் விளங்கிக்கொண்டு சுயவகுப்பேற்றத்தை வழங்கினார்கள் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

---

## முத்துமாரியம்பாள் சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், வியா

அறு கிரக சேர்க்கையால் ஏற்படும் கஷ்டங்களைத் தவிர்க்கும்பொருட்டு அராலி ஆவரம்பிட்டி முத்துமாரியம்பாள் ஆலயத்தில் சனிக்கிழமை மாலை சகஸ்ர சங்காபிஷேகம் நடைபெறும். இதனைத் தொடர்ந்து சகஸ்ர சங்கு பூசையும் பஞ்சகுண்ட விசேஷ ஹோமமும் மூன்றுநாள்வரை நடைபெறும்; 31-ந் திகதி காலை சகஸ்ர அபிஷேகமும் மகேஸ்வரபூசையும் நடைபெறும்.

---

## இயற்கை மரணம்

யாழ்ப்பாணம், வியாழன்

திருநெல்வேலியைச் சேர்ந்த 35 வயதுடைய விஜயராசா என்பவர் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் மரணமானார். அடிக்கடி அவர் வாந்தி எடுத்ததால் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாக மரண விசாரணையின் போது கூறப்பட்டது,

காலஞ்சென்றவரின் ஈரல் பழுதடைந்ததன் காரணமாக மரணம் சம்பவித்ததென பிரேத பரிசோதனையின் போது தெரிவிக்கப்பட்டது. மரணவிசாரணை நடத்திய யாழ்ப்பாணம் நகரப்பகுதி மரணவிசாரணை அதிகாரி திரு. ஏ. அமிர்தலிங்கம் இயற்கையில் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளித்தார்.

---

## பாடசாலை மாணவர் கஷ்டம்

யாழ்ப்பாணம், வியாழ

பலாலி—யாழ்ப்பாணம் பஸ்களில் ஏற்படும் இடநெருக்கடி, தாமத சேவை காரணமாக நேற்று மாணவர்களும் ஆசிரியர்களும் பெரிதும் கஷ்டப்பட்டனர்,

திருநெல்வேலி சந்தியில் நேற்று பஸ்ஸுக்காகக் காத்து நின்ற ஆசிரியர்களும் மாணவர்களும் நேரத்திற்குப் பாடசாலைக்குச் செல்ல முடியாமல் திண்டாடினர். பாடசாலை நாட்களில் இப்பகுதியில் மாணவர்கள் பெரிதும் கஷ்டப்படுவதாகக் கூறப்படுகிறது. இந்த வழியாக காலை நேரத்தில் அதிகப்படியான பஸ்களை சேவையில் ஈடுபடுத்துமாறு இ. போ. ச. அதிகாரிகளை மக்கள் கேட்டுள்ளனர்.

---

## மாணவருக்கு கடனுதவி

கொழும்பு, புதன்

கடந்த வருடத்தில் மக்கள் வங்கி 551 பல்கலைக்கழக மாணவர்களுக்கு கடனுதவி வழங்கியுள்ளது. பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி வசதிக்காக வழங்கப்பட்ட இந்த நிதி உதவியை, இம் மாணவர்கள் பட்டம்பெற்ற ஒருவருட காலத்துக்குள் திருப்பிச் செலுத்தவேண்டும்.

---

## பிரதேசவாரியான..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவசமாகும். ஆசிரியர் ஒருவரை அவரது விருப்பத்துக்கு மாறாக இடமாற்றஞ் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டால் அவர்முன்னர் படிப்பித்த பாடசாலைக்கு அண்மையில் உள்ள பாடசாலைக்கே இடமாற்றஞ் செய்யப்படுவார்.

27 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதத்தில் ஆசிரியர்களுக்கான 'கோட்டா' முறை ஒன்றும் இந்தத் திட்டத்தில் அடங்கியுள்ளது. இப்பொழுது அதிகூடிய சராசரி வரவைக்கொண்டே பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது, 27 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதத்தின்படி ஆசிரியர்களை கணக்கிட்டு நியமித்த பின்னரும் தமிழ், முஸ்லிம் பாடசாலைகளுக்கு ஒரு கூடுதல் சிங்கள ஆசிரியரை நியமிக்கவும் இந்த திட்டம் வகைசெய்கிறது ஒரு குறிப்பிட்ட ஆசிரியர் குறிப்பிட்ட பாடசாலை ஒன்றில் மூன்று வருடங்களுக்கு மேலாக சேவை செய்தபின்னரே இன்னொரு பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்படுவார், அதற்கு குறைந்தகால எல்லைக்குள் அவர் இடமாற்றம் செய்யப்படமாட்டார், கணவனும் மனைவியும் ஆசிரியர்களாக இருந்து ஒரே பாடசாலையிலேயோ அல்லது அயல்பாடசாலைகளிலோ சேவையாற்றின் இடமாற்றம் அவர்களுக்கு வசதிகுறைவை உண்டாக்கும் என்பது தெரிந்தால் அவர்கள் இடமாற்றம் செய்யப்படமாட்டார்கள்.

---

## யாழ். புதிய அரசாங்க அதிபர்

யாழ்ப்பாணம், வியாழன்

கொழும்பு சுங்கப்பகுதியைச்சேர்ந்ததிரு டபிள்யு. பத்மநாதன் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபராக நியமிக்கப்படுவார் எனத் தெரியவருகிறது. தற்பொழுது யாழ்ப்பாணம் அரசாங்க அதிபராகவிருக்கும் திரு. நெவில் ஜயவீரா கொழும்பு சுங்கப் பகுதிக்கு உதவி அதிகாரியாக மாற்றப்படுவார் எனக் கூறப்படுகிறது.

---

## ஜெனரல் இம்பட்

சாந்தாடொமிங்கோ, மே 26

டொமினிக்கனில் ஒரு அரசாங்கத்தை நிறுவும் அமெரிக்க யோசனையை ராணுவத் தலைவர் ஜெனரல் இம்பட் நிராகரித்துவிட்டார். அமெரிக்கா ஐ. நா., ஐ. ஏ. எஸ். ஆகியன டொமினிக்கன் உள்நாட்டு விஷயத்தில் தலையிட எவ்வித உரிமையும் இல்லை என அவர் கூறினார்.

---

## திருமண அழைப்பு

கணேசபிள்ளை —

பரமேஸ்வரி

தங்கோடை காரைநகரைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியரும் க. சிற்றம்பலம் சன்ஸ் புடவை மாளிகை (யாழ்ப்பாணம், கெல்லியடி) பேபி ஸ்ரோர்ஸ் (வெற்றிலையூர்) ஆகியவற்றின் உரிமையாளருமான சிற்றம்பலம் தம்பையா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் பேபி ஸ்ரோஸ் வெற்றிலையூர் பங்காளரும் மனேஜருமான கணேசபிள்ளைக்கும் களுங்காவி காரைநகரைச் சேர்ந்த வேலாயுதர் தம்பையா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரி பரமேஸ்வரிக்கும் விசுவாவசு வருடம் வைகாசித் திங்கள் 18-ந் திகதி (31—5—65) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில்வரும் சுபவேளையில் திருமணம் நடைபெறும். உறவினர்களும் நண்பர்களும சமூகம்தரும்படி அன்புடன் அழைக்கப்படுகின்றனர். 231

---

## வட்டமேசை ::

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறார். வட்டமேசைகள் ஒருபொழுதும் எந்தப் பிரசினைகளுக்கும் தீர்வுகண்டதில்லை. சர்வகட்சியினரும் இந்த மகாநாட்டில் கலந்துகொள்ள வேண்டுமென அவர் விரும்புகிறார். சர்வகட்சி மகாநாட்டில் எங்களுக்குச் சமஉரிமை கிடைத்துவிடுமென்றோ, தேசிய அரசாங்கம் அளிக்க உத்தேசித்துள்ளதைவிட மேலதிகமாகக் கிடைக்குமென்றோ திரு. பொன்னம்பலம் எதிர்பார்க்கிறாரா?

### சமஷ்டியைக் கைவிடமாட்டோம்

சமஷ்டிக் கொள்கையைக் கைவிடும்படி அவர் எங்களுக்கு யோசனை கூறுகிறார். அவருடைய யோசனைக்கு நன்றிதெரிவிக்கும் அதேசமயம நாம் அதை அப்படியே நிராகரித்துவிடுகிறோம். இலங்கையிலுள்ள இனப்பிரச்னைக்குச் சமஷ்டி ஆட்சி அமைப்பின் மூலமே நிரந்தரமான தீர்வு காணலாமென்பது எங்களது நம்பிக்கை. பெல்ஜியம் தனது நாட்டின் மொழிப்பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கு சமஷ்டி ஆட்சி அமைப்பை ஏற்படுத்திக்கொள்வதாக இரண்டு தினங்களுக்கு முன்னர்தான் பத்திரிகைகள் தெரிவித்தன. பெல்ஜியம் இலங்கையின் பாதியளவு. தங்களுக்கென மொழியும் பண்பாடும் உடைய ஒருமக்கள் மற்றொருஇன மக்கள் மத்தியில் நிரந்தரமாக தனித் தன்மையுடன் வாழவேண்டுமெனில் தங்களுக்கென ஒரு பிரதேசமும் அப்பிரதேசத்தில் தமக்கென சுயநிர்ணய உரிமையும் வைத்திருக்கவேண்டும். இதுதான் இங்கு தமிழ் பேசும் மக்களின் நிலையும்.

---

## ரூபா 10,000 கேட்டனராம்

### பொலிஸ் அதிகாரிகள் மீது விசாரணை

கொழும்பு, புதன்

உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரும், பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் குடியேற்ற இலாகா அதிகாரிகள் போல நடித்து சட்டவிரோத குடியேற்றக்காரர் எனக் கருதப்படும் ஒருவரிடமிருந்து பத்தாயிரம் ரூபாவை பறிக்க முயன்றபோது கையும் மெய்யுமாகப் பிடிபட்ட சம்பவம் இன்று புறக்கோட்டையில் நடைபெற்றது.

லஞ்ச கமிஷனர் இலாகாவிடமிருந்து கிடைத்த தகவலின் பேரில் சென்ற பொலிஸ் கோஷ்டி ஒன்று புறக்கோட்டையிலுள்ள ஹோட்டல் ஒன்றுக்கு அருகாமையில் வைத்து இரு பொலிஸ் உத்தியோகத்தர்களையும் கையும் மெய்யுமாகப் பிடித்தது. சட்டவிரோதக் குடியேற்றக்காரர் எனக் கருதப்பட்டவரிடம் தாங்கள் குடியேற்ற இலாகா அதிகாரிகள் என்றும், பத்தாயிரம் ரூபா தந்தால் எதுவும் செய்யாமல் விட்டுவிடுவதாகவும் கூறி அவரிடமிருந்து பணம் பெறமுயன்றதாக இதுபற்றிக் கூறப்படுகிறது. புறக்கோட்டை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டரும், கும்பனிதெரு பொலிஸ கான்ஸ்டபிள் ஒருவருமே இந்த "திருவிளையாடலி"ல் ஈடுபட்டவர்களாவர். கொழும்பு வடக்கு உதவிப் பொலிஸ் சுப்ரிண்டென்ட் இது குறித்து விசாரணை நடத்துவார்.

---

## வில்லூன்றி விநாயகர் ஆலய உற்சவம்

யாழ்ப்பாணம், வெள்ளி

வில்லூன்றி வீரகத்தி விநாயகராலயத்தில் இன்று வேட்டைத்திருவிழா நடைபெறும். சுவாமி குதிரை வாகனத்தில் [illegible] வருவார்.

---

## இரண்டுவாரங்களில் பரீட்சை முடிவுகள்?

கொழும்பு, புதன்

கடந்த வருடம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர (உயர்தரம்) பரீட்சை முடிவுகள் அநேகமாக இன்னும் இரண்டு வாரங்களில் வெளியாகலாம் எனப் பரீட்சைப் பகுதியைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். பரீட்சை முடிவுகளை வெளியிடுவதற்கான சகல ஏற்பாடுகளும் வெகு துரிதமாக நடைபெற்று வருவதாக அந்த அதிகாரி தெரிவித்தார்.

பல்கலைக்கழக புகுமுகப் பரீட்சைக்குப் பதிலாக இப்பரீட்சை சென்ற வருடத்திலே முதல் முறையாக நடத்தப்பட்டது. லண்டன் பல்கலைக் கழகத்தால் நடத்தப்படும், இப்பரீட்சையில் வேண்டிய தகுதிபெற்று பல்கலைக்கழகத்தில் அனுமதிக்கமுடியாதவர்களுக்கு அவர்கள் சித்தியடைந்த பாடங்களுக்கு தகுதிப் பத்திரம் வழங்கப்படும். இப்பரீட்சைக்கு 33,090-க்கும் அதிகமான பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர்.

---

## குடிசை தீக்கிரை

யாழ்ப்பாணம், வியா

நல்லூர் கைலாசபிள்ளையார் கோவில் பின் வீதியில் எஸ். சுப்பிரமணியம் என்பவருக்குச் சொந்தமான ஒரு குடிசை நேற்றுமுன்தினமிரவு தீப்பற்றிக்கொண்டதில் சுமார் நாலாயிரம் ரூபாய் நஷ்டமேற்பட்டதாகக் கூறப்படுகிறது. வீடு தீப்பற்றிக்கொண்டதும் பக்கத்திலுள்ளவர்கள் தீயை அணைப்பதில் பெருமுயற்சி எடுத்தபோதிலும் குடிசை தீக்கிரையாகிவிட்டது. இத்தக் குடிசைக்கு அருகிலுள்ள கல்வீடொன்று சிறிதளவு சேதத்துடன் காப்பாற்றப்பட்டுவிட்டது.

---

## வருடாந்த உற்சவம்

உடுப்பிட்டி, வியாழன்

கெருடாவில் தட்டங்கள் புளியடி முருகமூர்த்தி ஆலய வருடாந்த மகோற்சவம் அடுத்த மாதம் 4-ந் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவிருக்கிறது. மகோற்சவம் தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறும். பத்துத் தினங்களும் நல்லூர் தேவஸ்தான வித்துவான முததமிழ் மணி வண்ணை ஸ்ரீ கி. எஸ். எஸ். மணிபாகவதரின் "சம்பூரண ராமாயண விரிவுரை" நடைபெறும்.

---

## விடிவெள்ளி நினைவு விழா

யாழ்ப்பாணம், வெள்

சிறந்த எழுத்தாளரும், சமூகத்தொண்டருமான காலஞ்சென்ற திரு க. பே. முத்தையாவின் நினைவு விழாவை அவரது நண்பர்கள் எதிர்வரும் திங்கட்கிழமை மாலை நல்லூர் ஆசிரிய பயிற்சிக கலாசாலை மண்டபத்தில் கொண்டாடவிருக்கின்றனர். விழாவுக்கு இரசிகமணி கனகசெந்திநாதன் தலைமை வகிப்பார். திரு முத்தையாவின் தொண்டுகள் பற்றி பலர் சொற்பொழிவாற்றுவார்கள்.

---

## "குண்டு இல்லாத உலகம்"

ரபாட், மே 26

இரண்டாவது சர்வதேச "குண்டு இல்லாத உலகம்" மகாநாடு அடுத்த ஆண்டு நடைபெறவிருப்பதை ஜெர்மன் ஜனநாயக குடியரசின் பாராளுமன்ற உபசபாநாயகர் திரு. கோயிட்டஸ் இங்கு வரவேற்றார். 1962-ல் அக்ராவில்நடைபெற்ற முதலாவது மகாநாட்டின்நோக்கங்கள் ஜெர்மன் ஜனநாயககுடியரசின் வெளிநாட்டுக் கொள்கைக்கேற்ப அமைந்துள்ளன என்று அவர் தெரிவித்தார். (ஏ டி என்)

---

இப்பத்திரிகை சுதந்திர [illegible] அதிபரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 65-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு மே மாதம் 28-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org